Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JUNE 23, 2021

புதன்கிழமை ஜூன் 23, 2021 | ஒளி: 07 கதிர்: 29 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## இன்று காலை 10.0பக்கு எம்.பியாகிறார் ரணில்




ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினராக இன்று காலை சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளார்.

பாராளுமன்றம், இன்று (23) காலை 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியதன் பின்னர், முதலாவது கடமையாக, புதிய உறுப்பினர் சத்தியப்பிரமாணம் செய்துகொள்வார்.

தொடர்ச்சி P2

## பெண்ணுக்கு ‘டெல்டா’



கொவிட்-19, டெல்டா வைரஸ், 53 வயதான பெண்ணொருவருக்கு தொற்றியிருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

டெல்டா உறுதிப்படுத்தப்பட்ட மாதிவெலயைச் சேர்ந்த பெண், அங்கொட ஐ.டி.எச் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, டெல்டா தொற்று முதன்முறையாக தெமட்டகொடை பிரதேசத்திலேயே இனங்காணப்பட்டது. அப்பிரதேசம் முழுமையாக முடக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



புனர்வாழ்வுக்கு உட்படுத்தி

# ‘தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யவும்’

■ பா.நிரோஸ்

தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, எவ்விதமான வழக்கு விசாரணைகளுமின்றி, நீண்ட காலம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை, புனர்வாழ்வுக்கு உட்படுத்தி, விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, சபையில் கோரிக்கை விடுத்தார்.

தொடர்ச்சி P2

கொரோனா தடுப்பூசிகளை

## இலங்கைக்கு அமெரிக்கா வழங்குவதாக உறுதி



அமெரிக்கா ஒரு தொகை கொரோனா தடுப்பூசிகளை இலங்கைக்கு வழங்குவதாக உறுதியளித்துள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

ஆசியாவுக்கு ஒதுக்கப்பட்ட கொரோனா தடுப்பூசிகள் சுமார் 16 மில்லியனின் ஒரு பகுதி இலங்கைக்கு வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்படுகிறது.

இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், பாகிஸ்தான், இலங்கை, ஆப்கானிஸ்தான், மாலைதீவு, பூட்டான், பிலிப்பைன்ஸ், வியட்நாம், இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, லாவோஸ், பப்புவா நியூ கினியா, தாய்வான், கம்போடியா ஆகிய நாடுகளுக்கு 16 மில்லியன் தடுப்பூசிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

உலகளவில் தொற்றுநோயை முடிவுக்குக்

தொடர்ச்சி P2

## ‘பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும்’

■ பா.நிரோஸ்



பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப்போல எந்தவொரு சட்டத்தையும் கொண்டுவரக் கூடாதெனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அந்தத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

“ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடர் ஆரம்பமாகும் போதும், ஜி.எஸ். பி பிளஸ் வரிச் சலுகை கேள்விக்கு உட்படுத்தப்படும்போதும் மாத்திரம், பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பிலோ அல்லது அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பிலோ அரசாங்கம் பேசக்கூடாது” எனக் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றில், அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் உரையை அடுத்து, உரையாற்றும் போதே அவர், மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார். “பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்காது, அதில் திருத்தங்களை மேற்கொள்வதும் அதற்குப் பதிலாக வேறொரு சட்டத்தைக் கொண்டுவருவதோ பயனற்றது. அவ்வாறு செய்யும் பட்சத்திலும் அநீதிகள் தொடர்ந்து இழைக்கப்படும்” என்றார்.

ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையைப் பெற்றுக்கொள்வதற்காக

தொடர்ச்சி P2

## ‘மண் காசு தானே வாங்கப் போனவர்’



“தவறுதலாகச் சுட்டிருந்தாலும் பரவாயில்லை; கையை விசுக்கிக் கூப்பிட்டு, வேண்டுமென்றே சுட்டு, எனது கணவனைக் கொன்றுவிட்டனர்” என, இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் மெய்ப்பாதுகாவலரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட மகாலிங்கம் பாலசுந்தரத்தின் மனைவி கதறியழுந்தார்.
சம்பவம் தொடர்பில் தெரிவித்த அவர்,

தொடர்ச்சி P2

## ‘துப்பாக்கியை எடுத்ததும் வெடித்தது; நண்பன் இரத்த வெள்ளத்தில் சரிந்தான்’

### ஓட்டோ சாரதியான விஜயராஜா தெரிவித்தார்

■ கனகராசா சரவணன், வா.கிருஸ்ணா



“‘நான், யார் தெரியுமா’, ‘டேய், நான் யார் தெரியுமா’ என இருவரும் ஒருவரை ஒருவர் கேட்டுக்கொண்டதன் பின்னர், வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. ஒருகணம், என்னுடைய நண்பனின் கழுத்தை, அந்தப் பொலிஸ் கான்ஸ்டபிள் பிடித்து, இழுத்துச் சென்றார். அப்போது, தன்னுடைய இடுப்பிலிருந்து துப்பாக்கியை உருவுவதைக் கண்டேன். அதற்குள் என்னுடைய நண்பன் இரத்த வெள்ளத்தில் கிடந்தான்” என, துப்பாக்கிப் பிரயோகத்தில் மரணமடைந்த மகாலிங்கம் பாலசுந்தரத்தின் நண்பனான விஜயராஜா தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் மெய்ப்பாதுகாவலர், நேற்று முன்தினம் (21) மாலை நடத்திய துப்பாக்கிப்

தொடர்ச்சி P2



## டிராக்டர்கள், டிரக்குகளில் ஓட்டோக்களில் எம்.பிக்கள்

■ பா.நிரோஸ்

எரிபொருள்களின் விலை உயர்வைக் கண்டித்து, ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் டிராக்டர்கள், டிரக்குகள், ஓட்டோ போன்றவற்றில் பாராளுமன்றத்துக்கு வருகை தந்தனர்.

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை, பிரதான எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, சபாநாயகரிடம் கையளித்துள்ளது. எரிபொருள்களின் விலை அதிகரிப்பை எதிர்த்து, அமைச்சருக்கு எதிராக இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கத்தின் கீழ், கொண்டுவரப்படும் முதலாவது நம்பிக்கையில்லாப் பிரேரணை இதுவாகும்.

தொடர்ச்சி P2

## ‘லஞ்ச் சீட்டுகளை தடை செய்யவும்’



சகல வகையான லஞ்ச் சீட்களையும் (LUNCH SHEET) தடை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு, சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர, சுற்றாடல் அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவிப்பொன்றை வெளியிட்டே அமைச்சர், அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.


2016ஆம் ஆண்டு சுற்றாடல் அமைச்சராக பதவி வகித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, லஞ்ச் சீட்டை தடை செய்ய நடவடிக்கை எடுத்த நிலையில்,

தொடர்ச்சி P2

‘பிள்ளையானுக்குப் பிணை:

## பிள்ளைகளுக்கு இல்லை’

■ பா.நிரோஸ்



பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு இருந்தாலும் பிள்ளையானுக்கு, பிணை வழங்கப்பட்டு உள்ளதுபோல, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள ஏனைய பிள்ளைகளுக்கும் பிணை வழங்க வேண்டுமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நாமல் ராஜபக்ஷவுக்குப் பின்னர் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். “கடந்த ஒரு வருடத்தில் மாத்திரம் சுமார் 10[illegible]

தொடர்ச்சி P2

கொரோனாவை விட

## ‘பேரினவாதம் பயங்கரமானது’

■ க. அகரன்



கொரோனா வைரஸை விட, இந்தப் பேரினவாதம் பெரும் பயங்கரமாக இருக்கின்றதென, சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்தார்.

அரசியல் கைதிகளின் தற்போதைய நிலைவரம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், கொரோனா வைரஸ் பெரும் பாதிப்பாக உருவெடுத்துள்ள இக்காலகட்டத்தில்,

தொடர்ச்சி P2

பொதுவான பிரச்சினைகளில் ஒத்துழைப்பதற்கு

## இந்தியாவும் இலங்கையும் உடன்பாடு



இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவை மேம்படுத்துவதற்கு இரு நாடுகளும் இதுவரை முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் பலனளித்திருப்பதாக இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

தொற்றுநோயை எதிர்கொள்வதற்காக இந்திய அரசாங்கம் நல்கிய நிதி உதவி, கொவிட்-19 நிவாரண உதவிகளுக்காக இந்திய வெளியுறவு அமைச்சருக்கு குணவர்தன நன்றிகளைத் தெரிவித்தார்.

பிராந்திய அமைப்புகளான ‘பிம்ஸ்டெக்’, ‘ஐயோரா’ ஆகியவற்றுடன் இணைந்து பணியாற்றுவதற்கு இரு அமைச்சர்களும் இந்தக் கலந்துரையாடலின் போது ஒப்புக்கொண்டனர். குறிப்பாக, கொழும்புத் திட்டம் போன்ற பொதுவான தளங்களில் இரு நாடுகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்ற கருத்துகளும் இதன்போது பரிமாறிக்கொள்ளப்பட்டன.

தொடர்ச்சி P2

## ‘இழப்பு ஏற்படினும் காஸ் விலை கூடாது’

■ மகேஸ்வரி விஜயனந்தன்



இலங்கையில் சமையல் எரிவாயுவை விநியோகிக்கும் பிரதான விநியோக நிறுவனங்கள் இரண்டு, சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை 700 ரூபாய்க்கும் 800 ரூபாய்க்கும் இடையில் அதிகரிக்க வேண்டுமென நுகர்வோர் அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்து வருகின்றன.

ஆனால், இந்த நிமிடம் வரை சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிக்க அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல,

தொடர்ச்சி P2

## ‘மலையகப் பிரதிநிதிகள் நொண்டிகள்’

■ பா.நிரோஸ்



அரசாங்கத்துக்குள் இருக்கும் மலையகப் பிரதிநிதிகள் எமது மக்களுக்குத் தேவையானவற்றை பெற்றுக் கொடுப்பதில்லை. மக்கள் பெரும் துன்பப்படுகின்றனர் எனத் தெரிவித்த கண்டி மாவட்ட எம்.பியான வேலுகுமார், அரசாங்கத்துக்குள் இருக்கும் மலையகப் பிரதிநிதிகள் நொண்டிகள் என்றார்.

பாராளுமன்றத்தில், காணி சீர்திருத்தம் தொடர்பிலான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யவும்’

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில், நேற்று (22) நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது, தான் உள்ளிட்ட தற்போது அமைச்சர்களாக உள்ள பலர், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தோம். இதன்போது சிறைச்சாலைகளின் நிலைமைகளை நன்கு தெரிந்து கொண்டோம். எனக்கு எனது அப்பா (பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ) கற்றுக்கொடுத்ததைவிட, கடந்த அரசாங்கம் அதிகமானவற்றை கற்றுக்கொடுத்தது எனவும் தெரிவித்தார்.

புலிகளின் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில், பல இளைஞர்கள் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் எனது வயதைவிட அதிகளவான காலம் சிறைச்சாலையில் இருக்கிறார்கள். இதில் 35 பேர் வழக்கு விசாரணைகளில் ஏதுமின்றி தண்டனை அனுபவித்து வருகின்றனர் என்றார்.

இந்த 35 பேரில் அதிகளவானோர், தங்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைக் காலத்தைவிட அதிகளவான காலம் சிறைச்சாலைகளில் இருக்கிறார்கள். எனினும், நீண்டகாலமாகத் தடுப்புக் காவலில் உள்ள, மேல்நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு 38 வழக்குகள் விசாரிக்கப்பட்டு வருகிறன என்றார்.

சந்தேகநபர்களைத் தடுப்புக் காவலில் வைத்துக்கொண்டு, 20 வருடங்களுக்கு மேலாக இந்த வழக்குகள் விசாரிக்கப்படுகின்றன. இவர்களுக்கு மத்தியில் 13 பேர் எந்தவிதமான வழக்குகளும் தாக்கல் செய்யப்படாது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றார்.

குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாத 116 பேர், சிறைச்சாலைகளில் இருக்கிறார்கள். இவர்கள் பல வருடங்களாக தடுப்புக் காவலில் உள்ளனர். இவர்களுக்கு எதிரான வழக்குகள் விசாரிக்கப்பட்டு தண்டனை வழங்க வேண்டும். இல்லை என்றால், இவர்களுக்கு எதிராகக் குற்றப் பத்திரிகைத் தாக்கல் செய்ய வேண்டும். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாக இருந்த காலத்தில் 12 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள இவர்களுக்குப் பிணை வழங்க முடியாத நிலை காணப்படுகிறது. எனவே, இவர்களைப் புனர்வாழ்வுக்கு உட்படுத்தி விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## ‘பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும்’

கொண்டுவரப்பட்ட சிவில், அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை சட்டத்தாலும், அநீதிகள் இழைக்கப்படுகின்றன. அரசாங்கத்துக்கு எதிரான கொள்கைகளைக் கொண்டவர்களை தண்டிப்பதற்காகவே இச்சட்டம் பயன்படுத்தப்படுகிறது என்றார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, பாராளுமன்றத்தில் உரையாற்றியிருப்பதை தாம் வருவேற்பதாகவும், இதனையே தமிழ் அரசியல்வாதிகள் பல வருடங்களாக சபையில் கூறிவருகிறார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பிலோ, தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பிலோ கருத்துத் தெரிவிக்கும் தமிழ் அரசியல்வாதிகள், புலிகள் எனவும், பயங்கரவாதிகள் எனவும் விளித்துக் கூறுகின்றனர் என்றார்.


## இன்று காலை 10.01க்கு எம்.பியாகிறார் ரணில்



கடந்த பொதுத் தேர்தலில், தமக்கு கிடைத்த ஒரேயொரு தேசிய பட்டியலை ஐக்கிய தேசிய கட்சி நிரப்பவில்லை, நீண்ட இழுப்பறிக்குப் பின்னர், கட்சியின் தலைவரையே நியமிப்பதற்கு கட்சியின் செயற்குழு அண்மையில் தீர்மானித்திருந்தது.

அதன்பிகாரம், 225ஆவது பாராளுமன்ற உறுப்பினராக ரணில் விக்கிரமசிங்க இன்று (23) சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளார். அவர், நான்கு தசாப்த காலமாக பாராளுமன்றில் அங்கம் வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பெண்ணுக்கு ‘டெல்டா’



ஒரு மாதத்துக்குப் பின்னர், நாடு முழுமையாக நேற்று (21) திறக்கப்பட்டது. எனினும், கொழும்பு, கொலன்னாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேரபுற கிராம உத்தியோகஸ்தர் பிரிவில் ஸ்ரீ ஆனந்தராம வீதி முடக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக, இரத்தினபுரி மாவட்டத்தில், கொட்டாவல கிராம சேவகர் பிரிவும் முடக்கப்பட்டுள்ளது.

## இலங்கைக்கு அமெரிக்கா வழங்குவதாக உறுதி

கொண்டுவருவதற்கான சேவையில் ஜூன் இறுதிக்குள் ஒதுக்கீடு செய்வதாக அமெரிக்க ஜனாதிபதி பிடன் உறுதியளித்துள்ளார்.

இம்மாதத் தொடக்கத்தில், இலங்கைக்கான 25 மில்லியன் திட்டத்தை அறிவித்தது.

## ‘மண் காசு தானே வாங்கப் போனவர்’

இரண்டுடொரு நாள்களுக்கு முன்னர், மண் ஏற்றிச்சென்று வீடொன்றில் கொட்டிக்கொண்டிருந்துள்ளார். அப்போது அங்கு வந்த மெய்ப்பாதுகாவலர், தாங்கள் போகவேண்டும், லொறியை எடுக்குமாறு கேட்டுள்ளார். கொஞ்சம் இருங்கோ, மண்ணை இறக்கிவிட்டுச் செல்கின்றோம் என, எனது கணவர் தெரிவித்துள்ளார்.

அப்போது டயரை வெட்டிப் போட்டுவிட்டனர். ஆனால், என் கணவன் ஒன்றும் பேசாது திரும்பிவிட்டார். இறக்கிய மண்ணுக்கான காசை வாங்கத்தான் சென்றார். அதற்கிடையில், கையை விசுக்கிக் கூப்பிட்டு, என் கணவனை சுட்டுக்கொன்றுவிட்டார் எனக் கதறியழுதார்.

## ‘துப்பாக்கியை எடுத்ததும் வெடித்தது; நண்பன் இரத்த வெள்ளத்தில் சரிந்தான்’

பிரயோகத்தில் மணல் லொறியின் சாரதியான மகாலிங்கம் பாலசுந்தரம் (வயது 43) மரணமடைந்தார்.

துப்பாக்கி பிரயோகத்தில் காயமடைந்த மகாலிங்கம் பாலசுந்தரத்தை, ஓட்டோவில் ஏற்றிச்சென்று கொண்டிருந்த அவருடைய நண்பனான விஜயராஜா ஊடகங்களுக்கு கருத்துரைத்தார்.

நானும் பாலசுந்தரமும் நண்பர்கள், சம்பவதினமான நேற்று (நேற்று முன்தினம்) இராஜாங்க அமைச்சரின் வீடு அமைந்துள்ள மென்ரசா வீதியிலுள்ள வீடொன்றுக்கு மண் கொடுப்பது தொடர்பாக, பேசிவிட்டு ஓட்டோவில் திரும்பிக்கொண்டிருந்தோம்.

அப்போது, இராஜாங்க அமைச்சரின் வீட்டுக்கு முன்பாகவிருக்கும், வெற்றுக்காணியிலுள்ள மரமொன்றுக்கு அருகில், அந்த மெய்ப்பாதுகாவலர் நின்றுகொண்டிருந்தார். அவரைக் கண்டதும், ஓட்டோவை நிறுத்துமாறு எனது நண்பன் கூறினான், எனினும், நிறுத்தாமலே நான் சென்றேன்.

ஓட்டோவை திருப்புங்கோ, கூப்பிடுகிறார், என்னவென கதைத்துவிட்டுப் போவோம் என்றார். நானும் ஓட்டோவைத் திருப்பிக்கொண்டு, இராஜாங்க அமைச்சரின் வீட்டுக்கு முன்பாக நிறுத்தினேன்.

வீதிக்கு வந்த மெய்ப்பாதுகாவலர், ‘என்னடா கைகாட்டிச் சென்றநீ என நண்பனிடம் கேட்டார். நண்பனோ, ‘நீ யார்’? என்றார். அப்போது மெய்ப்பாதுகாவலர், ‘இதைக் கேட்க நீ யார்’ என்றார். இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதனையடுத்து, மெய்ப்பாதுகாவலர், நண்பனின் கழுத்தில் கையை வைத்து தள்ளிக் கொண்டுபோனார். ‘நான் யார் என தெரியுமா, பொலிஸ்’ எனக் கூறிக்கொண்டே, தனது இடுப்பிலிருந்து துப்பாக்கியை மெய்ப்பாதுகாவலர் எடுத்ததைக் கண்டேன். அந்த நொடிக்குள் எனது நண்பன், கீழே விழுந்துவிட்டான். இரத்த வெள்ளத்தில் கிடந்தான்.

அதன்பின்னர், என்னுடைய ஓட்டோவிலேயே அவனை ஏற்றிக்கொண்டு சென்றேன். எனினும், மரணித்துவிட்டான் எனத் தெரிவித்த ஓட்டோ சாரதி, நண்பனுக்கும் அந்த மெய்பாதுகாவலருக்கும் இடையில் கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிரச்சினைகள் தொடர்பில் எனக்குத் தெரியாது” என்றும் கூறினார்.

## ‘பேரினவாதம் பயங்கரமானது’

அரசியல் கைதிகளின் மனநிலையை அது பாதிப்பதாகவும் அவர்களுடைய அரசியல் மனநிலையை கொலை செய்வதொன்றாகவும் விளங்குகின்றதெனவும் கூறினார்.

குறிப்பாக, அரசியல் கைதிகளுடைய மனநிலையை தக்கவைப்பதற்கான வெளிச்செயற்பாடுகள் எதுவுமில்லாமல் இருப்பது, அவர்களுக்கு மன ரீதியாகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றதெனவும், அவர் கூறினார்.

இந்நிலையில், அரசியல் கைதிகளினுடைய குடும்பத்தாரை கவனிக்க வேண்டிய பொறுப்பு, ஆட்சியாளர்களின் செயற்பாடுகளில் தான் இருக்கின்றதெனவும், சத்திவேல் தெரிவித்தார்.

## டிராக்டர்கள், டிரக்குகளில் ஓட்டோக்களில் வந்த எம்.பிக்கள்

எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல, இப்பிரேரணையை சபாநாயகரிடம் கையளித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் 56 எம்.பிக்கள் இருக்கின்றர். எனினும், 43 உறுப்பினர்களே கையொப்பமிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிள்ளைகளுக்கு இல்லை’

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். பேஸ்புக் பதிவுகளுக்காகவும் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்” என்றார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கடந்த ஒரு வருடத்துக்குள் கைது செய்யப்பட்டவர்களுக்கு பிணை வழங்க வேண்டுமெனவும் தெரிவித்த அவர், “ஆளுங்கட்சியின் பின்வரிசையில் அமர்ந்துள்ள பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவனேசத்துரை சந்திரகாந்தன், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தாலும்,, அவருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது” என்றார்.

பிள்ளையானுக்கு வசதிகள் இருப்பதால் அவர் பிணையைப் பெற்றுக்கொண்டார். அதேபோல ஏனைய பிள்ளைகளையும் விடுதலை செய்க. அண்மையில் பிரதீபன் என்ற இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக இதுவரையில் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

## ‘மலையகப் பிரதிநிதிகள் நொண்டிகள்’



அவர், அரசாங்கத்துக்குள் இருக்கும் பிரதிநிதிகள், தமது மக்களுக்குத் தேவையானவற்றை செய்துகொடுக்கவேண்டும். ஆனால், தற்போதைய மலையக பிரதிநிதிகள் நொண்டிகள் என்றார்.

இதேவேளை, இணைய வழியூடான கற்கைகள் தொடர்பிலான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், பிள்ளைகள் மத்தியில் கல்வியில் சமநிலையற்ற தன்மையே காணப்படுவதாகத் அரச தொடர்பாடல் நிறுவனங்களைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு இலவசமாக இணையவசதிகளைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

பெருந்தோட்டப் புறங்களில் வெறும் 5 சதவீதத்துக்கும் குறைவான வகையிலேயே கணினி பயன்பாடுகள் காணப்படுகின்றன. பெருந்தோட்டப் பகுதிகளில் இணையவசதிகள் குறைவு என்பதால், இணைய வசதிகளுக்காக வீட்டுக்கூரைகளின் மேல் ஏறவேண்டும். இல்லையேல், மலைகளுக்கு செல்ல வேண்டிய நிலையே காணப்படுகிறது என்றார்.

இந்நாட்டின் பிள்ளைகளுக்கிடையில் கல்வியில் சமநிலையற்ற தன்மையே காணப்படுகின்றது இது பெரும் சவாலாக இருந்தாலும், எதிர்காலத்தில் இதனை சமநிலைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இல்லை என்றால், கல்வி நிலை கேள்விக்குறியதாக காணப்படும் என்றார்.

> **இந்நாட்டின் பிள்ளைகளுக்கிடையில் கல்வியில் சமநிலையற்ற தன்மையே காணப்படுகின்றது இது பெரும் சவாலாக இருந்தாலும், எதிர்காலத்தில் இதனை சமநிலைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இல்லை என்றால், கல்வி நிலை கேள்விக்குறியதாக காணப்படும்**

## ‘லஞ்ச் சீட்டுகளை தடை செய்யவும்’

அத்தீர்மானம் உரிய முறையில் செயற்படுத்தப்படவில்லை என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டில், குறைந்தது நாளொன்றுக்கு 10 மில்லியன் லஞ்ச் சீட்டுகள் சுற்றாடலில் கலப்பதாகவும் லஞ்ச்சீட் உக்குவதற்கு 3 வருடங்கள் செல்லும் என்பதால், லஞ்ச்சீட்டால் மண்ணுக்குள் சேரும் பிளாஸ்டிக் துகள்கள் 200 வருடங்கள் மண்ணில் இருக்குமென நிபுணர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர் என்றார்.

இதற்கு முன்னர் சில சந்தர்ப்பங்களில் லஞ்ச் சீட்டை தடை செய்வது குறித்து, சுற்றாடல் அமைச்சால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக தெரிவித்த அவர், தற்போது இது குறித்து புதிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிடாமலேயே உத்தரவு பிறப்பிக்க முடியும் என்றார்.

## இந்தியாவும் இலங்கையும் உடன்பாடு

இந்திய வெளியுறவு அமைச்சருடன் நேற்று முன்தினம் (21) இடம்பெற்ற தொலைபேசி உரையாடலிலேயே மேற்கண்ட விவகாரங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது என இலங்கை வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரு நாடுகளும் சந்திக்கும் கொவிட்-19 தொற்றுநோய் சார்ந்த அபாயம் குறித்து, இரு அமைச்சர்களும் விரிவாகக் கலந்துரையாடியதுடன், தற்போதைய நிலைமையை விரைவாக இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கான அனைத்து பலமும் இந்தியாவுக்கு இருக்கும் என அமைச்சர் குணவர்தன இந்திய வெளியுறவு அமைச்சருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

> **ஏறக்குறைய அரை மணி நேரம் நீடித்த இந்த உரையாடலின் போது, கொவிட்–19 தொற்றுநோய் சார்ந்த அபாயம் குறித்து, இரு அமைச்சர்களும் விரிவாகக் கலந்துரையாடியதுடன், நிலைமையை விரைவாக இயல்பு நிலைக்குக் கொண்டுவர, இந்திய அமைச்சருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார்**

ஏறக்குறைய அரை மணி நேரம் நீடித்த இந்த உரையாடலின் போது, இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர ஆர்வத்தின் பல முக்கியமான விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன என்றும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ‘இழப்பு ஏற்படினும் காஸ் விலை கூடாது’

எமக்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டாலும் அரசாங்கம் அதனை சில முறைகளூடாக கையாளும் என்பதுடன், விலையை அதிகரிக்க எதிர்பார்க்கவில்லை என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (22) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், எந்தக் காரணத்துக்காகவும் நாட்டில் தற்போதைய நிலையில், மக்களுக்கு அழுத்தம் ஏற்பட இடமளிக்க முடியாது. சமையல் எரிவாயு விநியோக நிறுவனங்களின் தொடர்ச்சியான கோரிக்கையை அடுத்து, இறுதியில் 350- 400 ரூபாய் வரை அதிகரிப்புக்கு வரலாம் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்த நிலையில், எந்தவொரு காரணத்துக்காகவும் சமையல் எரிவாயு விலை அதிகரிக்கக் கூடாதென்ற தீர்மானத்துக்கு ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை வந்தது என்றார்.

குறித்த நிறுவனங்களிடம் காணப்படும் விடயங்கள் மற்றும் முன்வைத்த காரணங்களை ஆராய்ந்து, இந்த இரண்டு நிறுவனங்களும் எரிவாயு இறக்குமதி நடவடிக்கையில் ஒரே வேலைத்திட்டத்தை முன்னெடுக்க முடியுமா என்று ஆய்வு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கமைய, கொள்முதல் முறையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கவும் அப்படி இல்லையாயின் உலக சந்தையில் இதனைக் கட்டுப்படுத்த முடியாத காரணங்கள் இருக்குமாயின் அது தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அரசாங்கம் கலந்துரையாடும் என்றார்.





பா.நிரோஸ்

## தீப்பற்றிய கப்பல்:

# “முதற்கட்ட நட்டஈடு மீனவர்களுக்கு வழங்கப்படும்; மீன்களையும் சாப்பிடலாம்”



எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலிடமிருந்து முதற்கட்டமாக கிடைக்கவுள்ள நட்டஈட்டை, மீனவர்களுக்கு வழங்க ப்போவதாகத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மீன்களை அச்சமின்றி சாப்பிட முடியுமெனவும் தெரிவித்தார்.

சபாநாயகர் தலைமையிலான நேற்றைய (22) பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே, அவர் மேற்கண்வடாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர், “கொழும்புத் துறைமுகத்துக்கு அருகில் தீப்பற்றி எரிந்த எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் மீனவர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் பாதிக்கப்பட்டிருந்தார்கள். தற்போது மீனவர்கள் மீண்டும் தங்களது தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள்” எனவும் தெரிவித்தார்.

அதேவேளை, மீன்களை சாப்பிடக் கூடாதென வதந்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. அவையெல்லாம் போலியானவை; மீன்களை சாப்பிடலாம் எனவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

## சமையல் எரிவாயு விலை

# ‘ஒரு சதத்தாலும் அதிகரிக்காது’



சமையல் எரிவாயுவின் விலை ஒரு சதத்தால் கூட அதிகரிக்கப்படாது என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு, பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்கவின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், “நிறை குறைந்த புதிய எரிவாயு சிலிண்டர்களை அறிமுகம் செய்வதற்கு, நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை இதுவரையில் அனுமதி அளிக்கவில்லை. எனினும், இதில் சில அநீதிகள் நடந்துள்ளன என்பதை ஏற்று க்கொள்கிறேன்.

“12.5 லீட்டர் எரிவாயுவுக்கு சந்தையில் தட்டுப்பாடு உள்ளது. இதனால், அதிவிசேட வர்த்தமானி ஊடாக அனைத்து எரிவாயு நிரப்பும் நிலையங்களிலும் 12.5 கிலோ எரிவாயு இருக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டு உள்ளதோடு, இதனை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்” என்றார்.

## “என்னைத் தாக்கிய

# மொரிஷை மன்னித்தேன்”

■ பா.நிரோஸ்



தான் குண்டுத் தாக்குதலுக்கு முகங்கொடுத்திருந்தாலும், தனக்கு எதிராகத் தாக்குதலை நடத்தியவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டுமென்றே தான் விரும்புவதாகத் தெரிவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, தாக்குதலை நடத்திய இளைஞன் 15 வருடங்களாக வழக்கு விசாரணைகள் இன்றி சிறையில் இருக்கிறார். அவருக்கு அந்தத் தண்டனையே போதுமெனவும் அவர் தெரிவித்தார்.

நேற்றையப் பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

“ஒரு தடவை நான் வழக்கு விசாரணைக்காக வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து நீதிமன்றத்துக்கு சென்றிருந்தேன். நீதிமன்றத்தில் எனக்கு அருகில் மற்றோர் இளைஞரும் அமர்ந்திருந்தார். அவரின் பெயர் மொரிஷ். என் மீது தற்கொலைத் தாக்குதலை நடத்திய தற்கொலை தாரியை அழைத்து வந்த வாகனத்தின் சாரதியே அந்த இளைஞன். நான் நீதிமன்றத்துக்கு சென்றிருந்தபோதே, என் மீதான தாக்குதலை நடத்திய இளைஞரும் நீதிமன்றத்துக்கு அழைத்துவரப்பட்டிருந்தார். அந்த இளைஞருடன் தற்போதும் தொலைபேசியில் பேசுவேன்” எனவும் தெரிவித்தார்.

2006ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் என் மீது குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. தாக்குதல் இடம்பெற்று ஒரு வருடத்துக்குப் பின்னர் தாக்குதலுடன் தொடர்புடைய மொரிஷ் கைது செய்யப்பட்டார். அவர் தற்போது 15 வருடங்களுக்கு மேலாக வழக்கு விசாரணைகள் இன்றி சிறைச்சாலையில் இருக்கிறார். அவருக்கு அந்தத் தண்டனையே போதும் எனவும் பொன்சேகா தெரிவித்தார்.

# ‘அரசாங்கத்தில் இருப்பவர்களில் நானே பலமானவன்’

■ பா.நிரோஸ்



“ஐக்கிய மக்கள் சக்தியால் எனக்கு எதிராக முன் வைக்கப்பட்டு இருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணையின் அடிப்படையில், அரசாங்கத்தில் இருப்பவர்களில் நானே அதிக பலம்மிக்க நபர்” என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

ஐ.ம.சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளீன் பண்டார எழுப்பிய “ஆளுங்கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு தெரியாமலும், அமைச்சரவைக்கு அறிவிக்காமலும் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டு இருக்குமாக இருந்தால், அவ்வாறான தீர்மானத்தை எடுத்த ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவையை விடப் பலம்மிக்க அந்த நபர் யார் என வினவினார்” இந்தக் கேள்விக்கு பதிலளிக்கும்போதே உதய கம்மன்பில மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தைத் தனியாருக்கு ஒருபோதும் வழங்கும் திட்டங்களும் அரசாங்கத்திடம் இல்லை என்றும் தெரிவித்தார்.

## மொட்டுக் கட்சியால்

# ‘கம்மன்பிலவுக்கு கழுத்தறுப்பு’

■ பா.நிரோஸ்



எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்ட விவகாரத்தில், ஆளுங்கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, அமைச்சர் உதய கம்மன்பிலவை கழுத்தறுப்புச் செய்யமுயற்சிக்கிறதென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளீன் பண்டார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், கடந்த ஏப்ரல், மே மாதங்களில் உலக சந்தையில் எரிபொருள் விலை மிகவும் குறைந்திருந்தது. எனினும் உள்நாட்டில் விலைகள் குறைக்கப்படாதென அப்போது கூறிய அரசாங்கம், உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கும்போது, அதற்கான நிவாரணத்தை வழங்கி, உள்நாட்டில் எரிபொருள்களின் விலைகளை அதிகரிக்கப்போவதில்லை எனவும் அரசாங்கம் கூறியதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.\

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தம்;

# புலி சந்தேக நபர்களையும் விடுவிக்க நடவடிக்கை



தேசிய பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலும், மனித உரிமைகள் மீறப்படாத வகையிலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களை செய்ய உள்ளதாகத் தெரிவித்த நீதி அமைச்சர் அலி சப்ரி, இது தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார்.

சர்வதேசத்துக்காகவோ அல்லது ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகைக்காகவோ பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளப் போவதில்லை எனவும் கூறிய அவர், புலிகளின் பயங்கரவாதச் செயற்பாடுகள் தொடர்பில் சந்தேகத்தின்பேரில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் தடுப்புக் காவலில் உள்ள பலர், தங்களது தண்டனைக் காலத்தைவிட அதிகளவான காலம் சிறைச்சாலையில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் சிந்தித்து, முழுமையாக ஆராய்ந்து, இவர்களை விடுதலை செய்வதற்கான முறையொன்றை உருவாக்கி, விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, நீண்டகாலமாக வழக்கு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்களின் வழக்குகளை விரைவாக விசாரணை செய்வது நிறைவுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

## மேன்முறையீட்டு நீதிமன்றம்

# ‘அரசாங்கத்தின் கன்னத்தில் அறைந்துள்ளது’

■ பா.நிரோஸ்



ஷானி அபேசேகரவுக்குப் பிணை வழங்கி, மேன்முறையீட்டு நீதிமன்றம் அரசாங்கத்தின் கன்னத்தில் அறைந்துள்ளதாகத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

நேற்றையப் பாராளுமன்ற அமர்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர், பயங்கரவாதத் தடைச் சட்டம் அரசியல் பழிவாங்கல்களுக்காகப் பயன்படுத்தப் படுகிறது. இச்சட்டம் இரத்துச் செய்யப்பட வேண்டுமென தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. சி.ஐ.டியின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவின் பிணை மனு தொடர்பில், மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்பினூடாக, அரசாங்கத்தின் கன்னத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றம் அறைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.





சேதன பசளை உற்பத்தியாளர்களை **பதிவுசெய்தல்**

சேதன பசளை உற்பத்திக்கான தொழில்நுட்பம் மற்றும் இடம் அரசாங்கத்திடமிருந்து

**நிவாரண வட்டியுடனான வங்கிக்கடன்**

- பசுமையான நாட்டை உருவாக்குவதற்காக அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கை தீர்மானத்தை யதார்த்தமாக்குவதற்கு தேவையான தரமான சேதன பசளை உற்பத்திக்காக மாபெருமளவில் தொழில் முயற்சியாளர்களை பதிவு செய்துக்கொள்ளப்படும்

பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவத்தை கீழேயுள்ள இணையத்தளத்தின் ஊடாகவும் அல்லது QR குறியீட்டினை ஸ்கேன் செய்வதன் மூலமாகவோ பெற்றுக்கொள்ள முடியும்.

www.agrimin.gov.lk | www.dog.lk | www.agrarindept.gov.lk

உங்களுக்கு தேவையான மேலதிக விபரங்களை தெரிந்து கொள்வதற்கு 011 288 68 95 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

State Ministry of Fertilizer Production and Supply

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் எனது

# ‘தனிப்பட்ட பகையோ, அரசியலோ இல்லை’

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவிப்பு



■ க.விஜயரெத்தினம்

“மட்டக்களப்பு நகரில் மன்ரசா வீதியில் அமைந்துள்ள எனது வீட்டுக்கு முன்னால் இடம்பெற்றுள்ள துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் எனது தனிப்பட்ட பகையோ, கட்சி சார்ந்த அரசியலோ இல்லை” என இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் தெரிவித்தார்.

திங்கட்கிழமை (21) மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற சம்பவத்தில் உயிரிழந்த நபரின் குடும்பத்தாருக்கு, எனது ஆழ்ந்த இரங்கலையும் மன வேதனையையும் தெரிவித்துக்கொள்கிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

இது குறித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்தச் சம்பவம் இடம்பெற்ற போது, நான் கொழும்பில் இருந்த நிலையில், தொலைபேசி ஊடாகத் தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக சம்பவத்தில் காயமடைந்தவரை வைத்தியசாலையில் அனுமதிக்கக் கூறியதுடன், சம்பவம் தொடர்பான முழுமையான விசாரணைகளை உடன் முன்னெடுக்குமாறும், நீதியை நிலை நாட்டுமாறும், பிரதேசத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் உட்பட அனைவருக்கும் பணிப்புரை விடுத்துள்ளேன்.

“எனது வீட்டில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிளுக்கும், பிறிதொரு நபருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தால் மேற்படி நபர் காயமடைந்து, அதன் பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

“இது குறித்து நான் மிக வேதனை அடைகின்றேன். காலம் தாழ்த்தாது உரிய நீதியை, நியாயத்தை நாட்டக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கூறியுள்ளேன். அத்துடன், இந்த விடயத்தில் எனது தனிப்பட்ட விதமான பகையோ, கட்சி சார்ந்த அரசியலோ இல்லை என்பதையும் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்” என்றார்.

## வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்பாக மக்கள் எதிர்ப்பு

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பில் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்பாக திங்கட்கிழமை (21) இரவு பொதுமக்கள் எதிர்ப்பு நடவடிக்கையொன்றை மேற்கொண்டனர்.

இராஜாங்க அமைச்சரின் பாதுகாப்பு உத்தியோகத்தரால் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே, மக்கள் இந்த எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன்போது இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனின் உருவப் படங்களை தீயிட்டு எரித்து, பிரதேச மக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.



இதையடுத்து அப்பகுதியின் பாதுகாப்பு தற்போது பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஆளும்கட்சியென்று கூறிக்கொண்டு

## ‘அடாவடி அரசியலே முன்னெடுக்கப்படுகின்றது’

■ வா.கிருஸ்ணா



ஆளும்கட்சியென்று கூறிக்கொண்டு இங்கு அடாவடி அரசியலே முன்னெடுக்கப்படுவதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஏறாவூர்ப்பற்று பிரதேச சபை உறுப்பினர் வனேந்திரன் சுரேந்திரன் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சரின் வீட்டுக்கு முன்பாக இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு தொடர்பில் உயிரிழந்தவரின் வீட்டுக்கு நேற்று (21) சென்று ஆறுதல் கூறிய அவர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே, இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, “ஜனாதிபதி தேர்தலின் பின்னர், தியேட்டர் மோகனின் தியேட்டரை உடைத்தார்கள்; பாராளுமன்ற தேர்தல் முடிந்த பின்னர், கொம்மாதுறையில் இராஜாங்க அமைச்சரின் செயலாளர், இரண்டு இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தினார். இன்று இந்த இளைஞனை சுட்டுக்கொலை செய்துள்ளார்கள்.

“ஆளும் கட்சியென்று கூறிக்கொண்டு அடாவடி அரசியலே இங்கு மாறிமாறி செய்யப்படுகின்றது. நாட்டில் ஜனநாயகம் ஜனநாயகம் என்று கூறுகின்றார்கள். இங்கு ஜனநாயகமாக எந்தச் செயற்பாடுகளும் நடைபெறவில்லை. இருக்கும் அனைவரையும் கொலை செய்துவிடுகின்ற செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன” என்றார்.

கோறளைப்பற்று மத்தி

## பிறைந்துறைச்சேனையில் மூன்று வீதிகள் முடக்கம்

■ எம்.எம்.அஹமட் அனாம்

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பிறைந்துறைச்சேனை 206சி கிராம அதிகாரி பிரிவில் 03 வீதிகள், நேற்று (22) முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த பிரிவில் முதலாம் குறுக்கு, இரண்டாம் குறுக்கு, அப்துல்லாஹ் குறுக்கு வீதி ஆகிய மூன்று வீதிகளே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட கொரோனா தடுப்புச் செயலணியின் பரிந்துரைக்கமைய, இவ்வீதிகள் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளதாக கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.ரி. நஜீப்கான் தெரிவித்தார்.

மேற்படி வீதிகளில் அதிகளவான கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, மறுஅறிவித்தல் வரை இந்த 3 வீதிகளையும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த மட்டக்களப்பு மாவட்ட கொரோனா தடுப்புச் செயலணி குழுவால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம், கோறளைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக ஊழியர்கள், வாழைச்சேனை பொலிஸார், வாழைச்சேனை பிரதேச சபையினர், கிராம மட்ட குழுவினர் ஆகியோர் இணைந்து, குறித்த மூன்று வீதிகளுக்குத் தடைகளைப் போட்டு பாதுகாப்பு நடவடிக்கையை பலப்படுத்தினர்.



தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின்

## புதிய உபவேந்தராக பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவு

■ நூருல் ஹுதா உமர், எம். என். எம். அப்ராஸ்



இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் புதிய உபவேந்தராக கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இலங்கை பல்கலைக்கழக வரலாற்றில் 43 வயதில் உப வேந்தராக நியமிக்கப்பட்டுள்ள இவர், அதே பல்கலைக்கழகத்தின் மாணவராவார்.

சுமார் 25 வருடங்களுக்கு மேற்பட்ட தென்கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றில், அப்பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒருவர், உபவேந்தராக நியமிக்கப்பட்டமை இதுவே முதல் தடவையாகும்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் தெரிவுக் குழுவின் பேரவைக் குழுவுக்கு தெரிவுக்குழுவால் சமர்ப்பித்த பட்டியலில் முதலாம் இடத்தை இவர் தக்கவைத்திருந்தார்.

சாய்ந்தமருதை சேர்ந்த பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், எதிர்வரும் ஒகஸ்ட் ஒன்பதாம் திகதி, தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

போரின் வடுக்களிலிருந்து

# ‘இன்னும் நாங்கள் மீளவில்லை’

■ க. அகரன்

போரின் வடுக்களிலிருந்து மீண்ட சமுதாயமாக இன்னும் நாங்கள் மாறவில்லையென, வவுனியா மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஜோசப் ஜெயகெனடி தெரிவித்தார்.

அத்துடன், போரின் வடுவிலிருந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் இன்னும் அந்த அவலத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்றும், அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு, கிழக்கில் உள்ள சிறுவர்களின் தற்போதைய நிலை தொடர்பில் வினவிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், அன்று வடமுனையில், போராளிகளாக சிறுவர்கள் நிற்கின்றார்கள் என்று விமர்சித்த சர்வதேச அரங்கு, இன்று, சிறுவர்கள் பல்வேறுபட்ட ரீதியில் துன்பப்படுகின்ற, வேதனைப்படுகின்ற அவலங்களைக் கண்டும் காணாமல் இருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.


வடக்கு, கிழக்கில் எடுக்கப்பட்ட தகவல்களின்படி, உண்மையிலேயே சிறுவர் தொழிலாளிகள் என்ற தகவல்கள் சரியாக இல்லாவிட்டாலும், தந்தையை இழந்த சிறுவர்கள் அதிகமாக இருக்கின்றனர்.



அதேபோல், தந்தையை இழந்து அல்லது, தொழில் தேடி வெளிநாடுகளுக்குச் சென்ற தாய்மார்கள் உள்ள குடும்பங்கள் அதிகமாக இருக்கின்ற இந்த நிலைமையில், சிறுவர்கள் வேலைக்குச் சென்று தான் தமது குடும்பங்களைப் பார்க்க வேண்டிய ஓர் அவலத்துக்குள் தள்ளப்படுவதை காணக்கூடியதாக இருக்கின்றதெனவும் அவர் தெரிவித்தார்.

## ‘இராணுவம் வெளியேறினால் திறக்கலாம்’

■ சண்முகம் தவசீலன்



இராணுவத்தினர் வெளியேறினால், முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முத்துஜயன்கட்டு பலநோக்குக் கூட்டுறவு சங்கக் கிளை இல-2 கடையை திறக்க முடியுமென்று, முத்துஜயன்கட்டு பலநோக்குக் கூட்டுறவு சங்கத் தலைவர் தெரிவித்தார்.

முத்துஜயன்கட்டு இடது கரை பகுதியில் உள்ள குறித்த சங்கக் கடையை திறந்து, வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது குறித்து மாவட்ட செயலாளர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்தும், குறித்த பகுதியில் இராணுவத்தினர் காவலரனொன்றை அமைந்திருப்பதைக் காரணம் காட்டி, குறித்த கிளை திறக்கப்படாது இருப்பதாகவும், அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இது தொடர்பில், முத்துஜயன்கட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரிடம் வினவியபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவின்

## நிதி திறைசேரிக்கு திரும்புகிறது




■ நடராசா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில், சாரதிகளுக்கான விடுதி அமைப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஆறு மில்லியன் ரூபாய் நிதி, விடுதி அமைக்கப்படாது திறைசேரிக்குத் திரும்புவதாக, கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் க.விஜிந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் சாரதிகளுக்கான விடுதி அமைப்பதற்காக, மாகாண சுகாதார அமைச்சின் ஊடாக பல வழிகளில் நிதிகளை ஒதுக்கி இருந்தாலும் கூட, வைத்தியசாலை நிர்வாகத்துக்கு, விடுதி அமைப்பதற்கான அனுமதி கிடைக்கப்பெறவில்லை என்றார்.

இந்நிலையில், கட்டம் கட்டமாக ஒதுக்கப்பட்டிருந்த சுமார் ஆறு மில்லியன் ரூபாய் நிதி, தற்போது திறைசேரிக்கு திரும்புவதாகவும், அவர் தெரிவித்தார்.

நிதி கையிருப்பில் உள்ள போதும், வேலைத்திட்டங்களை அனுமதிக்காமல், மாகாண சுகாதார அமைச்சு இழுத்தடிப்புகளை மேற்கொண்டதன் காரணமாகவே, சாரதிகளுக்கான விடுதியை அமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், தவிசாளர் குற்றஞ்சாட்டினார்.

வவுனியாவுக்கு

## ‘பி.சி.ஆர் பரிசோதனை இயந்திரம் கிடைக்கும்’



■ க. அகரன்

வவுனியாவுக்கு, பி.சி.ஆர் இயந்திரம் விரைவில் கிடைக்குமென, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், நேற்று (22), பாராளுமன்றில் வைத்து, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சியை சந்தித்து, பி.சி.ஆர் இயந்திரத்தின் அவசர தேவையை எடுத்துரைத்ததாகத் தெரிவித்தார்.

இதையடுத்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உடன் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்ட அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, விரைவில் வவுனியாவுக்கு பி.சி.ஆர் இயந்திரத்தை வழங்குமாறு பணிப்புரை வழங்கினார் என்றும், திலீபன் எம்.பி தெரிவித்தார்.

அதேசமயம், எதிர்வரும் மாதம் கட்டாயமாக பி.சி.ஆர் இயந்திரத்தை வழங்குவதாக அமைச்சர் உறுதியளித்தாரென்றும் கூறினார்.

# திம்பிலி விவகாரம்: எண்மர் கைது

■ செ.கீதாஞ்சன்



முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, கோம்பாவில். திம்பிலி பகுதியில் உள்ள காடுகள் அழிக்கப்பட்டு, அங்குள்ள காணிகள் அபகரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் எட்டுப் பேர், நேற்று (22) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே, இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என, புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

பயணக் கட்டுப்பாடு அமலில் இருந்த வேளையில், திம்பிலி குளத்துக்குச் சொந்தமான பகுதி மற்றும் அதனை அண்டிய காட்டுப்பகுதிகள், கனரக இயந்திரம் கொண்டு அழிக்கப்பட்டு, அங்குள்ள அரச காணிகள் அபகரிக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பில், கோம்பாவில் கிராம சேவையாளரால் எட்டுப் பேர் அடையாளப்படுத்தப்பட்டு, புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில், நேற்று (22), அடையாயப்படுத்தப்பட்ட நபர்கள், பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்த நிலையில், கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை, முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.



எரிபொருள் விலையேற்றம்:

# மலையகத்தில் எதிர்ப்பு



எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்று (22) மாத்தளை, கினிகத்தேன, இரத்தினபுரி ஆகிய நகரங்களில் மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டிலும் கண்டி, தலாத்து ஓயாவில் பொதுமக்களாலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அத்துடன், யட்டியாந்தோட்டை நகரிலும், கம்பளை, கெலிஓயாவிலும் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதேச சபை உறுப்பினர்களால் எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதன்போது, அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்துக்குக் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

(படங்கள்: எஸ். கணேசன், என். ஆராச்சி, மஹேஸ் கீர்த்திரத்ன, சேஹ்ன் செனவிரத்ன, அஜித்லால் சாந்தஉதய, நவி)













விக்டோரியா நீர்த்தேக்கப் பகுதிகளில்

# நில அதிர்வு கருவிகள் பொருத்த நடவடிக்கை

■ சேஹ்ன் செனவிரத்ன



விக்டோரியா நீர்த்தேக்கத்தை அண்மித்த பிரதேசங்களில், புதிதாக 10 நில அதிர்வு பதிவு கருவிகளைப் பொருத்த, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

ஜேர்மனியிடமிருந்து குறித்த கருவிகள் கிடைத்துள்ளதென புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் அநுர வல்பொல தெரிவித்துள்ளார்.

இந்தக் கருவிகளைப் பொருத்திய பின்னர், விக்டோரியா நீர்த்தேக்கத்துக்கு அண்மையில் ஏற்படும் நில அதிர்வுகள் குறித்து உரிய முறையில் கண்காணிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உரிய கருவிகள் இன்மையால், தற்போது அந்தப் பிரதேசத்தில் ஏற்படும் நிலஅதிர்வுகள் குறித்து உரிய தகவல்களைப் பெற முடியாது உள்ளதென்றும் மஹகனதராவ, பல்லேகல, புத்தங்கல, ஹக்மன ஆகிய பிரதேசங்களில் மாத்திரம் நில அதிர்வை உணரும் கருவிகள் தற்போது பொருத்தப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



மதுபான நிலையங்களால்

# ஹட்டன் மக்களுக்கு அசௌகரியம்

■ ரஞ்சித் ராஜபக்ஸ

ஹட்டன் நகரிலுள்ள மதுபான நிலையங்கள் இரவு 9 மணி வரை திறந்திருப்பதால் அங்கு அதிகளவானோர் வருகை தருவதுடன், இவர்கள் மதுபோதையில் மதுபான நிலையங்களுக்கு அருகில் சுற்றித்திரிவதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே, மதுபான நிலையங்களை மாலை 6 மணியுடன் மூடுவதற்கு கலால் திணைக்கள பணிப்பாளரும் சுகாதார சேவை பணிப்பாளரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஹட்டன் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, நேற்று முன்தினத்துடன் (22) நாட்டில் அமல்படுத்தப்பட்டிருந்த பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ள நிலையில், சுகாதார சேவை பணிப்பாளரின் ஆலோசனைக்கமைய மதுபான நிலையங்களை இரவு 9 மணிவரை திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதென, ஹட்டன் கலால் அலுவலக பொறுப்பதிகாரி ஜானக பெரேரா தெரிவித்தார்.

பயணக் கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்ட போது, மதுபான நிலையங்களைத் திறப்பது குறித்து சுகாதார சேவை பணிப்பாளரால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தை இரத்துச் செய்து, 21ஆம் திகதி புதிதாக வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்துக்கு அமைய, காலை 9 மணியிலிருந்து இரவு 9 மணிவரை மதுபான நிலையங்களை திறந்து வைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றாமல் இருக்கும் மதுபான விற்பனை நிலையங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## கொரோனா தொடர்பான செய்திக் துளிகள்...

மொனராகலை பிரதேச சுகாதார சேவை அலுவலகப் பிரிவில் கொரோனா தொற்றாளர்கள் 31 பேர், நேற்று முன்தினம் (21) அடையாளம் காணப்பட்டுள்ளனர் என, பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் துஷித அத்தனாயக்க தெரிவித்துள்ளார். (சுமணசிறி குணதிலக)

---

லுணுகலை சுகாதாரப் பிரிவில் நேற்று (22) 14 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (மலர்வேந்தன்)

---

பொகவந்தலாவை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட செப்பல்டன், கெர்க்கஸ்வோல்ட், ரொப்கில், கெம்பியன், பெட்ரசோ ஆகிய தோட்டங்களில் புதிதாக 29 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (சுதத்.எச்.எம்.ஹேவா)

---

அம்கமுவ சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட வட்டவளை தியகல தோட்டம், மவுண்ட்ஜின் ஆகிய தோட்டங்களிலிருந்து 11 தொற்றாளர்கள் நேற்று (22) அடையாளம் காணப்பட்டனர். (ரஞ்சித் ராஜபக்ஸ)

---

நுவரெலியா மாவட்டத்தில் இதுவரை 6,306 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன், 76 பேர் உயிரிழந்துள்ளனர்.

கம்பனிகளின்

# ‘அராஜகப் போக்கை கண்டிக்கின்றோம்’

## புதிய ஜனநாயக மாக்சிச கட்சி தெரிவிப்பு

■ ஆ.ரமேஸ்




ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பின் பின்னர், பெருந்தோட்டக் கம்பனிகள், தொழிலாளர்கள் மீது நாளுக்கு நாள் மேற்கொண்டு வரும் தான்தோன்றித்தனமான அராஜகப் போக்கைக் கண்டிப்பதாக, புதிய ஜனநாயக மாக்சிச கட்சியின் தேசிய அமைப்பாளர் வெத்திலிங்கம் மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தச் செயற்பாடுகளுக்கு எதிராக, தேசிய ரீதியான போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியாகத் தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டி வரும் தோட்டக் கம்பனிகள், ஆயிரம் ரூபாய் அதிகரிப்பையும் முழு மனதுடன் வழங்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே, பெருந்தோட்டக் கம்பனிகளின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளுக்கு எதிராக, களம் இறங்கிப் போராட, மலையகத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து தொழிற்சங்கங்களும் கருத்து வேறுபாடுகளை மறந்து, முன்வந்தால் மாத்திரமே தோட்டக் கம்பனிகளின் ஆதிக்கத்தை அடக்க முடியும் என்றும், இதற்கான அழைப்பை புதிய ஜனநாயக மாக்சிச கட்சி விடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.



அதிக வேகத்தால்

# பள்ளத்தில் பாய்ந்த ஓட்டோ

■ ரஞ்சித் ராஜபக்ஸ

செனன் தோட்டத்திலிருந்து வுட்லேன்ட் நோக்கிச் சென்ற ஓட்டோவொன்று, அதிக வேகம் காரணமாக, 10 அடி ஆழமான பள்ளமொன்றுக்குள் விழுந்துள்ளது.

ஹட்டன்- கொழும்பு பிரதான வீதியில், செனன் தோட்டத்துக்கு அருகில், நேற்று (22) காலை இடம்பெற்ற இவ்விபத்தில் எவருக்கும் எவ்வித பாதிப்பும் இல்லை எனத் தெரிவித்த ஹட்டன் பொலிஸார், விபத்துக்குள்ளான ஓட்டோ பலத்த சேதமடைந்துள்ளது என்றும் தெரிவித்தனர்.

விபத்து இடம்பெற்ற இடத்தில் தேயிலைச் செடிகள் வளர்ந்திருந்தமையால், ஓட்டோவில் பயணித்தவர்களுக்கோ சாரதிக்கோ எவ்விதப் பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

# கைம்பெண்களுக்கு கரம்கொடுத்துக் கரைசேர்க்கத் திட்டம் தீட்டுங்கள்

ஒரு வருடத்துக்குள் நினைவுகூர வேண்டிய நாள்கள் பலவிருந்தாலும், முக்கியமான நாள்கள் பல, நாள்காட்டிக்குள்ளே அடக்கப்பட்டு விடுகின்றன. கொண்டாட்டங்கள், பரிசுகளை வழங்கும் நாள்களைத் தவிர, ஏனைய நாள்கள் அனைத்துக்கும் அதேகதிதான். அவ்வாறான நாள்களில் ஒன்றாகவே சர்வதேச விதவைகள் நாளான இன்றைய (ஜூன் 23) நாளை, பார்க்க வேண்டியிருக்கிறது.

கணவனை இழந்து, ஆதரவின்றித் தவிக்கும் கைப்பெண்களின் நிலை குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கிலேயே, உலகம் முழுவதும் இந்நாள் அனுஷ்டிக்கப்படுகின்றது.

கைம்பெண்களின் பிரச்சினைகள், தேவைகள் குறித்து அவதானித்து, அவற்றுக்குத் தீர்வுகாண வேண்டும் எனும் நோக்கிலேயே ஐ.நா பொதுச் சபையில், 2010 டிசெம்பர் 23ஆம் திகதி, தீர்மானத்தை நிறைவேற்றி, இந்நாள் பிரகடனப்படுத்தப்பட்டது.

காபூன் நாட்டின் மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஒமர் பூன்கோ ஒடிம்பாவின் மனைவி, சில்வையோ ஒடிம்பாவின் கோரிக்கையின் பிரகாரமே சர்வதேச கைம்பெண்கள் நாள் அனுஷ்டிக்கப்படுகின்றது.

ஐ.நாவின் தரவுகளின் பிரகாரம், கணவனை இழந்த 250 மில்லியனுக்கும் மேற்பட்ட கைம்பெண்கள் உலகளாவிய ரீதியில் வாழ்கின்றனர். இலங்கையில், உள்நாட்டு யுத்தத்துக்குப் பின்னர், வடக்கு, கிழக்கில் மட்டும் சுமார் 40ஆயிரத்துக்கு மேற்பட்ட கைம்பெண்கள் ஜீவியம் நடத்துகின்றனர்.

விதவைகளின் தலைவிதி பற்றி, ஆட்சியதிகாரத்தைக் கொண்டிருப்போர் கவனத்தைச் செலுத்துவதே இல்லை. யுத்தத்துக்குப் பின்னர், வட மாகாணத்தைத் தமிழர்களும் கிழக்கைத் தமிழரும் முஸ்லிம்களும் ஆட்சியதிகாரம் செய்தனர். அக்காலப்பகுதியிலேனும் கைம்பெண்களின் குடும்பங்களை மேம்படுத்துவதற்கான முறையான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை என்பது பரவலான குற்றச்சாட்டாகும்.

யுத்தத்துக்குப் பின்னர், பெருமெடுப்பில் படையெடுத்த நுண்கடன் நிறுவனங்கள், விதவைக் குடும்பங்களையும் பெண்கள் தலைமைத்துவம் தாங்கும் குடும்பங்களையும் தங்கள் வலைக்குள் விழச்செய்துவிட்டன.

‘நுண்கடன்’ எனும் பொறிக்குள் விழுந்த பல குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், ‘குட்டிபோட்ட’ வட்டிகளைக் கட்டமுடியாது, தன்னுயிரை மாய்த்துக்கொண்டமை செய்திகளாகின. இன்னும் சில பிரதிநிதிகள், வட்டிக்காகப் பாலியலை இலஞ்சமாகவும் கோரியிருந்தமை, வெட்கித் தலைக்குனியச் செய்தன.

தங்களுடைய கைகளில் அதிகாரம் கிடைத்த தருணத்தைப் பயன்படுத்தி, தம்மக்களின் மேம்பாட்டுக்காக, ஆகக் கூடுதலான வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொடுத்திருக்கலாம். எனினும், அரசியல் தீர்வு எனும் போர்வைக்குள் சிக்கி, அதிகாரத்தைத் தக்கவைக்கும் பயணத்தில் பயணித்தமையால், மீண்டும் மத்திய அரசாங்கத்திடம் கையேந்தும் நிலைக்குள் விழுந்துவிட்டனர்.

யுத்தத்தில் கணவனை இழந்த பெண்கள் அல்லது, முழுமையாக அங்கவீனமடைந்துள்ள குடும்பத்தலைவனைக் கொண்டிருக்கும் குடும்பங்களுக்கு, பெண்களே தலைமை தாங்குகின்றார்கள். எவ்விதமான வருமானங்களும் இன்றி, ஏதோவொரு தொழிலைச் செய்து, குடும்பத்தைக் காப்பாற்றுகின்றார்கள். அவ்வாறானவர்களின் குடும்ப மேம்பாட்டுக்காக, முறையான திட்டங்களை வகுக்கவேண்டியது, ஆட்சியதிகாரத்தில் இருப்போரின் தலையாய கடப்பாடாகும்.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

துரோகம் இராஜதந்திரமாகி விட்டது. ஆனால், கடந்த காலங்களில் மட்டுமல்ல, மன்னர் ஆட்சிக் காலத்தில் கூட, இதுதான் நடந்துகொண்டிருந்தது. எவரையும் நம்பமுடியாது.

கூட இருந்து குழிபறிப்பது துரோகங்களாகும். மன்னனின் சகோதரர்கள், மந்திரிகள், ஏன் பெற்ற மகன்கள்கூட, ஆட்சியைப் பிடிக்க, இத்தகைய துரோகங்களைச் செய்துள்ளார்கள். மேலும், தனது நாட்டில் இருந்துகொண்டே, தாய் நாட்டுக்கு எதிராக, பக்கத்து நாட்டின் உதவியுடன் ஆட்சியைப் பிடித்த எத்தர்கள் இருந்தார்கள். உலக வரலாற்றில், பலருடைய சரித்திரங்களில் இவற்றைப் படித்திருக்கிறோம்.

பதவிக்காக, குறுக்கு வழிகளில் தமது அதீத புத்திசாலித்தனங்களைப் பயன்படுத்தி, ஆட்சியைக் கைப்பற்றிய துரோகிகளின் சரித்திரங்கள் புதியவை இல்லை.

எந்த ஆட்சிகளும் நிலையாக இருந்ததும் இல்லை. அதேபோல், எந்த சூதுவாதும் துரோகத்தனங்களும் முழுமையாக வெற்றிபெற்றதில்லை. அன்றும் இன்றும் உண்மைகள் தான் வெற்றிபெற்றன. ஆனால், நியாயங்களைப் பெற காலங்கள் தேவைப்பட்டன. நிலையற்ற வாழ்க்கையில் நாடகம், தொடரவே செய்யும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்



எம்.எஸ்.எம். ஐயூப்

ரணிலின் பாராளுமன்றப் பிரவேசம்:

# தோல்வியுற்றவர்கள் தகுதி அற்றவர்களா?

ஐக்கிய தேசிய கட்சிக்கு, 2020 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது, தேசிய பட்டியல் மூலம் கிடைத்த ஆசனத்துக்கு, கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை, அக்கட்சி நியமித்துள்ளது. அதன்படி, அவர் இன்றைய பாராளுமன்றக் கூட்டத்துக்கு சமூகமளிப்பார் என்று கூறப்படுகிறது.

ஒரு கட்சிக்கு, தேசிய பட்டியல் மூலம் கிடைத்த ஆசனத்துக்கு, ஒருவர் நியமிக்கப்படுவது ஒன்றும் புதிய விடயம் அல்ல. ஆனால், சுதந்திரத்துக்கு முன்னர், 1946 ஆம் ஆண்டு முதல், இந்நாட்டு அரசியலில் மிக முக்கிய பங்காற்றி, கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னரும் ஆளும் கட்சியாக இருந்த ஐ.தே.க, அத்தேர்தலில் மாவட்ட ரீதியாக ஓர் ஆசனத்தையேனும் பெற முடியவில்லை. தேசிய பட்டியல் மூலம் மட்டுமே, ஓர் ஆசனத்தை அக்கட்சி பெற்றது. அந்தத் தேசிய பட்டியல் ஆசனத்துக்கு, சுமார் ஒரு வருட காலமாக, எவரையும் நியமிக்க முடியாமல் அக்கட்சி தடுமாறிக்கொண்டு இருந்தது.

இதன் காரணமாகவே, அந்தத் தேசிய பட்டியல் ஆசனம், இன்று பேசுபொருளாகி உள்ளது. அதேவேளை, தேர்தலில் தோல்வியுற்ற வேட்பாளர்களை, தேசிய பட்டியல் மூலம், பாராளுமன்றத்துக்கு நியமிப்பதில்லை என ஐ.தே.க தேர்தல் காலத்தில் கூறி வந்தது. ஆனால், அக்கட்சி இப்போது, தோல்வியடைந்த தமது தலைவரையே நியமித்துள்ளது. இதுவும், இந்த ஆசனம் பேசுபொருளாவதற்கு மற்றொரு காரணமாகியது.

இதனிடையே, ரணில் விக்கிரமசிங்க அவ்வாறு பாராளுமன்றத்துக்கு வந்தால், எதிர்க்கட்சித் தலைவராக அவர் நியமிக்கப்படலாம் என, ஆளும் கட்சியினர் ஒரு கதையைக் கட்டிவிட்டனர். அதன் மூலம், ஐ.தே.கவுக்கும் தற்போது பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் (ஐ.ம.ச) இடையே, மேலும் பகையை மூட்டிவிடுவதே ஆளும் கட்சியின் நோக்கமாக இருக்கிறது என்பது தெளிவாகிறது.

அதேவேளை, பாராளுமன்றத்துக்கு ரணில் வந்தவுடன், ஐக்கிய மக்கள் சக்தியின் சுமார் 60 பாராளுமன்ற உறுப்பினர்கள், அவரோடு கைகோர்த்துக் கொள்ளக் காத்திருப்பதாக, ஐ.தே.க பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார கூறியிருந்தார். அதனை ஆளும் கட்சியினரும் கூறித் திரிகின்றனர். அதுவும் ரணிலின் பாராளுமன்ற வருகைக்கு மேலும் கவனத்தை ஈர்த்துக் கொடுத்துள்ளது. ஐ.ம.சக்கு 60 ஆசனங்கள் பாராளுமன்றத்தில் இல்லை என்பது வேறு விடயமாகும்.

பாராளுமன்றத்தில் ஒரேயோர் ஆசனத்தை வைத்துக் கொண்டு, ரணில் எதிர்க்கட்சித் தலைவராக முடியுமா? 2015ஆம் ஆண்டு, ஜனாதிபதி தேர்தலை அடுத்து, 45 ஆசனங்களை வைத்திருந்த ரணில், பிரதமராக முடியுமாக இருந்தால், ஓர் ஆசனத்தை வைத்துக் கொண்டு, ஏன் எதிர்க்கட்சித் தலைவராக முடியாது என, ஐ.தே.க தலைவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

அன்றைய நிலைமையும் இன்றைய நிலைமையும் ஒன்றல்ல என்பதை, ஐ.தே.க தலைவர்கள் மறந்துவிட்டார்கள் என்று கூற முடியாது. அன்று, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா, ரணிலைப் பிரதமராக நியமித்தார். அது சட்ட விரோதமானது. பாராளுமன்றத்தில் அதி கூடிய நம்பிக்கையைப் பெற்றவரைத் தான், பிரதமராக ஜனாதிபதியால் நியமிக்க முடியும். ஆனால், மைத்திரிபால சிறிசேனா அதைப் புறக்கணித்து, ரணிலைப் பிரதமராக நியமித்தார். அந்தவகையில், ஜனாதிபதியாக வந்து, மைத்திரி செய்த முதல் காரியம் சட்ட விரோதமானதாகும். ரணிலுக்கும் இந்தச் சட்ட முறைமை நன்றாகத் தெரிந்திருந்தும், சட்ட விரோத நியமனத்தை ஏற்றார்.

அது சட்டவிரோதமான நியமனம் என்பதை அறிந்திருந்தும், அதற்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணையொன்றைக் கொண்டு வந்து, தமக்குப் பாராளுமன்றத்தில் இருந்த பெரும்பான்மை பலத்தைப் பாவித்து, ரணிலைப் பதவியிலிருந்து வெளியேற்ற முடியுமாக இருந்தும், மைத்திரியின் நிறைவேற்று ஜனாதிபதி பதவிக்குப் பயந்து, மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் விட்டுக் கொடுத்தது.

இனி, அது போன்றதொரு நிலைமை வரும் என்று கூற முடியாது. அப்படி வந்தால், ஐ.ம.சயின் பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானோர், ரணிலோடு இணைய வேண்டும். அவ்வாறு இணைவார்கள் என்று தான், ரங்கே பண்டார கூறுகிறார். ஆனால், ஐ.ம.சயின் உறுப்பினர்கள், அதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்று கூறுவதற்கான எந்தவோர் அறிகுறியும் இல்லை.

பாராளுமன்றத்துக்கு ரணில் வந்து, எதையும் பெரிதாகச் செய்யப் போவதில்லை. அதிகாரத்தோடு பாராளுமன்றத்தில் அவர் இருந்த காலத்திலும், பெரிதாக எதையும் சாதிக்கவில்லை. அதனாலேயே, 2015 ஆம் ஆண்டு பதவிக்கு வந்து மூன்றாண்டுகளில், தமது வாக்கு வங்கியில் மூன்றில் ஒரு பங்கை இழந்த நிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்கொண்டார். ஐ.தே.கவின் 74 வருட வரலாற்றில், அவரது தலைமையிலேயே, அக் கட்சி மாவட்ட ரீதியாக, முதன் முறையாக ஓர் ஆசனத்தையேனும் பெற முடியாத நிலை ஏற்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க, சிறந்த அறிவாளி என்பது உண்மை. தேசிய, சர்வதேச பொருளாதாரம், சர்வதேச அரசியலைப் பற்றி, எப்போதும் படித்துக் கொண்டு இருப்பவர். இந்த விடயங்களில், அவர் மஹிந்த, கோட்டாபய, மைத்திரி, சந்திரிகா, சஜித் போன்றவர்களைவிட ஆழமான அறிவுமிக்கவர்; சர்வதேச ரீதியில் மதிக்கப்படுபவர். ஆங்கிலப் புலமை காரணமாக, சர்வதேசத் தலைவர்களுடன் நெருங்கிப் பழகக்கூடியவர்.

எனினும், சாதாரண மக்களினதோ, தமது கட்சியின் கீழ் மட்ட அமைப்பாளர்களினதோ இதயத் துடிப்பை ரணில் அறியாதவர். இதன் காரணமாகவே, கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னர், ஐ.தே.கவின் பிரதேச அமைப்பாளர்களில் 90 சதவீதமானோரும், அக்கட்சியை ஆதரித்த சிறுபான்மையினக் கட்சியினரும் அவரைக் கைவிட்டு, சஜித்துடன் இணைந்து கொண்டனர்.

தேர்தலில் தோல்வியடைந்தவர், தேசிய பட்டியல் மூலம் நியமிக்கப்படுவது நாகரிகமானதல்ல என்ற வாதம், சரியானது என்று கூற முடியாது. “மாவட்ட ரீதியில் தோல்வி அடைந்தவர்களை, தேசிய பட்டியல் மூலம் நியமிப்பதில்லை” என்று, கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் ரணிலும் கூறியிருக்கலாம். அந்தவகையில், தமது கூற்றுக்கே முரணாக, அவர் இன்று செயற்பட்டுள்ளார் என்பது உண்மை தான்.

ஆனால், இலங்கையின் தேர்தல் முறையைப் பார்த்தால், மாவட்ட ரீதியில் தோல்வி அடைந்தவர்களில் ஒரு சிலரை, தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்றத்துக்கு நியமிப்பதில் எவ்வித தவறும் இல்லை. அதற்கு, முதன்மையான காரணம், மிகப் பெரும்பாலான வாக்காளர்கள், அரசியல் அறியாமையின் நிமித்தமே வாக்களிக்கிறார்கள். அவர்கள் பெயர்பெற்ற திருடர்கள், அரசியலே தெரியாத நடிகைகள், நடிகர்கள், விளையாட்டு வீரர்கள் ஆகியோரையே கூடுதலாக விரும்புகிறார்கள்.

2010 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது, கம்பஹா மாவட்டத்தில் ஐ.தே.க பிரதித் தலைவராக இருந்த கரு ஜயசூரியவைப் பார்க்கிலும் கூடுதலான வாக்குகளை, அதே கட்சியின் கீழ் போட்டியிட்ட ‘பபா’ என்ற உபேக்ஷா சுவர்ணமாலி என்ற நடிகை பெற்றுக் கொண்டார். பின்னர், தொலைக் காட்சி உரையாடல் ஒன்றின் போது, அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் என்றால் என்ன என்று தெரியாமல், ‘பபா’ திண்டாடினார்.

அந்தத் தேர்தலின் போது, தெரிவானவர்களுக்கும் தெரிவாகாதவர்களுக்கும் இடையிலான தேர்வுக் கோடு, பபாவுக்கும் கருவுக்கும் இடையில் அமைந்திருந்தால், தோல்வி அடைந்தவர்களில் ஒருவராகவே, கரு ஜயசூரியா இருந்திருப்பார்.

தோல்வி அடைந்தவர்கள் தகுதியற்றவர்கள் என்றும், தெரிவானோர் தகுதியானவர்கள் என்றும் வாதிடுவதாக இருந்தால், கரு ஜயசூரியா தகுதியற்றவர்; ‘பபா’ தகுதியானவராகிறார். ‘பபா’ இராஜினாமாச் செய்தால், அவரது இடத்துக்கு, கரு நியமிக்கப்படக் கூடாது; ஏனென்றால், அவர் தகுதியற்றவர்; இது சரியான வாதமா?

“தேசிய ரீதியில் கொள்கை வகுத்தல், சட்டமியற்றல், பொது நிதித் துறையைக் கண்காணித்தல், மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தல் ஆகிவற்றுக்கான திறனே, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கான தகைமைகளாகும்” என, பொது நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்றக் குழுவின் (COPE) முன்னாள் தலைவரும் கொம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகரும் மூத்த அரசியல்வாதியுமான டியூ குணசேகர, கடந்த வருடம் கூறியிருந்தார். அவை, ஏற்றுக் கொள்ளக்கூடிய தகைமைகளாகும். அதனை விடுத்து, ஒருவர் தேர்தலில் வெற்றியடைந்தாரா தோல்வியடைந்தாரா என்பதை, எம்.பி பதவிக்கான தகைமைக்கு அடிப்படைகளாகக் கொள்வது கேலிக்கூத்தாகும்.

2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த சுனில் ஹந்துன்னெத்தியை, ஜே.வி.பி தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்றத்துக்கு அனுப்பியது. அவர், ‘கோப்’ குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டு, சகல கட்சிகளினதும் பாராட்டைப் பெறும் வகையில் கடமையாற்றினார்.

எனவே, எவரும் தேர்தலில் தோல்வியடைந்தால் தகுதி அற்றவராகி விடுவதில்லை. அந்த அடிப்படையில், பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த ரணிலும், தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்றம் செல்வது நாகரிகமற்ற செயலல்ல ஆகும்.

## கடிதங்கள்

### காணிப் பிணக்குகளுக்குத் தீர்வு இல்லை; மக்கள் பெரும் சிரமம்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மக்களின் காணிப் பிணக்குகள் தீர்த்துவைக்கப்படாத நிலை தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக, அரசாங்கத்துக்குக் காணியை வழங்கிய மக்களுக்கான மாற்றுக் காணிகளைப் பெற்றுக் கொடுக்காத நிலை, காணிகளுக்கான ஆவணம் இல்லாத நிலை போன்ற இடர்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

2012 ஆம் ஆண்டு தொடக்கம் மீள்குடியேறிய மக்கள், நகரின் அபிவிருத்தித் தேவைகளுக்காக, அரச திணைக்களங்களால் பொதுமக்களின் காணிகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. அவர்களில் சிலருக்கு, மாற்றுக் காணிகள் இன்னும் வழங்கி வைக்கப்படாத நிலையில், இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வருவதாகப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

மக்களின் காணிகளுக்கான ஆவணங்கள், பிரதேச செயலத்தால் பெற்றுக்கொடுக்காத நிலை தொடர்வதுடன், வடமாகாண காணி ஆணையாளர், மாகாண ஆளுநர் ஆகியோருக்கு இந்த இழுத்தடிப்புத் தொடர்பாகத் தெரியப்படுத்தியும்கூட, இதுவரை தீர்வு முன்வைக்கப்படவில்லை.

காணிக் கச்சேரி நடத்தி, மக்களின் காணிப் பிணக்குகளைப் பிரதேச செயலகம் விரைவில் தீர்த்துவைக்க வேண்டும் என்றும் இவ்வாறு, காணிப் பிணக்குகள் தொடர்வதால், குடும்பங்களுக்கு இடையில் வன்முறை, குடும்பம் பிரிதல் போன்ற விரும்பத்தகாத சமூக விளைவுகளும் ஏற்படுவதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டி உள்ளார்கள்.

–செ. கீதாஞ்சன்




## மாதச் சம்பளங்களையும் அமைய ஊழியருக்கு நிவாரணங்களையும் வழங்கிய பிரதேச சபை தவிசாளர்

காரைதீவு பிரதேச சபையில் பணியாற்றும் 23 அமைய ஊழியர்களுக்காகத் தனது இரண்டு மாதச் சம்பளத்தை நிவாரணமாக வழங்கினார் தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில். சமுக சேவையாளர்களுக்கு ஒரு முன்மாதிரியான செயற்பாடாக இதனை அவர் முன்னெடுத்திருந்தார். ஏனைய மக்கள் பிரதிநிதிகளுக்கு அவர் ஒரு முன்மாதிரியாக திகழ்கிறார்.

சமகால கொரோனாத் தாக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தையிழந்த அமைய சுகாதார ஊழியர்கள் 23 பேருக்கும் உலருணவு நிவாரணம் வழங்கப்பட்டது.

தவிசாளர் கி. ஜெயசிறில் தாமாக முன்வந்து, தனது இருமாதக் கொடுப்பனவான 50 ஆயிரம் ரூபாவை இதற்காக வழங்கி, உலருணவுப்பொதிகளையும் வழங்கி வைத்தார்.

சபை முன்றலில் சுகாதார முறைப்படி, நடைபெற்ற இவ்வைபவத்தில் சபையின் ஏனைய உறுப்பினர்களும் கலந்துகொண்டு பொதிகளை வழங்கி வைத்தார்கள்.

தவிசாளரின் ஏற்பாட்டில் அண்மைக்காலமாக அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் தொடக்கம் மத்திய முகாம் வரை 2,000க்கும் அதிகமான உலருணவுப்பொதிகள் வழங்கப்பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அண்மையில் முதலாவதாக உயிரிழந்த காரைதீவு பிரதேச சபை ஊழியர் வி. சுரேந்திரனின் குடும்பத்துக்கும் நிதியுதவி வழங்க தவிசாளர், உறுப்பினர்கள், சபை ஊழியர்கள் ஆகியோர் முன்வந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(காரைதீவு நிருபர் வி.ரி. சகாதேவராஜா)



## நன்பேரியல், வலேபோட, புதுகாடு, சிசில்ட்டன் தோட்ட மக்களுக்கு உதவி

இரத்தினபுரி, இம்புள்பே பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட நன்பேரியல், வலேபோட, புதுகாடு, சிசில்ட்டன் தோட்டங்களில் அன்றாட வருமானத்தை இழந்த குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்களை வலேபோட தோட்ட தலைவர் யோகராஜ் வழங்கி வைத்தார். ஒவ்வொரு தோட்டத்திலும் சுமார் 50 குடும்பங்கள் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. இதன் போது, நன்பெரியல் விவேகாநந்த பாடசாலை அதிபர் சன்ஜீவன், இம்புல்பே பிரதேச சபை உறுப்பினர் இருதயம் என்டனி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பலாங்கொடை க. மஹிந்த குமார்







இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பால், 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் வாரீர்' என்ற செயற்றிட்டத்தின் கீழ், பயணத்தடை காரணமாக வாழ்வாதாரத்தை இழந்திருந்த மக்களுக்கு, உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.



## கண்டி தமிழ் வர்த்தகர் சங்கம் உதவி

கண்டி தமிழ் வர்த்தகர் சங்கம், றக்சாவ, கல்பிஹில்ல, காலகட, ஆத்தளை, கவத்தன்னை, உனனகலை, மாவுசா, நெல்லிமலை, சோலங்கந்தை போன்ற பகுதிகளில் வறுமையில் வாடும் மக்களுக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்கி வைத்தது. பன்விலை சைவ மகா சபையின் தலைவர் எஸ். சுரேஸ்குமார், வர்த்தகர் சங்கத்தின் தலைவர் ஆர். அன்பழகன், பொருளாளர் எஸ். எச். சார்ள்ஸ் உட்பட சங்க உறுப்பினர்கள் பலரும் குறித்த பிரதேசத்துக்குச் சென்று பொதிகளை வழங்கி வைத்தனர்.







## வள்ளிக்கேணியில் 40 பயனாளிகளுக்கு இடருதவி பொருட்கள் உதவி



மூதூர் கிழக்கின் கடற்கரைச் சேனைக் கிராம சேவகர் பிரிவில் உள்ள வள்ளிக்கேணி கிராமத்தில், பயணத்தடையால் சீவனோபாயமின்றி இன்னலுறும் 40 பயனாளிகளுக்கான இடருதவிப் பொருட்களை, கிளிவெட்டி முத்துமாரியம்மன் கோவில் அர்ச்சகர் சிவஸ்ரீ ஸ்ரீரூப சர்மா, சம்பூர் வலய அனர்த்தப் பாதுகாப்பு அமைப்பினூடாக வழங்கி வைத்தார்.

இதற்கான நிதி அனுசரணையை சுப்பிரமணியம் விஜியலட்சுமி தம்பதியினர் வழங்கியிருந்தனர். நிகழ்வில், கோவில் அர்ச்சகர் சிவஸ்ரீ ஸ்ரீரூப சர்மா, சம்பூர் வலய அனர்த்தப் பாதுகாப்பு அமைப்பின் தலைவர் து. ஜெகன் ஆகியோருடன் கிளிவெட்டி புளிய மரத்தடி சங்கத்தின் உறுப்பினர்களும் இணைந்து, இடருதவிப் பொருட்களை வழங்கி வைத்தனர்.

அ . அச்சுதன்

தஞ்சாவூர்

200 ஆண்டுகள் பழைமையான

# தூக்கு மேடையை இடிக்க எதிர்ப்பு



தஞ்சாவூரில் 200 ஆண்டுகள் பழைமையான மராட்டிய மன்னர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட தூக்கு மேடையை இடிக்க, அந்தப்பிரதேச மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். தஞ்சாவூர் சேவப்பநாயக்கன் ஏரி மேல்கரையில், மராட்டிய மன்னர் காலத்தைச் சேர்ந்த 200 ஆண்டுகள் பழைமையான தூக்கு மேடை உள்ளது. பத்து அடி உயரத்தில் செங்கல், சுண்ணாம்பு, கருங்கல் கலவைக் கட்டுமானத்தைக் கொண்டுள்ளது. 30 அடி அகலத்திலும், 200 அடி நீளத்திலும் கட்டப்பட்ட இந்தத் தூக்கு மேடை, தற்போது மேற்கூரை ஏதும் இல்லாமல் வெறும் கட்டடங்களோடு காணப்படுகிறது.

இந்நிலையில், சிலர் இதை இடித்துவிட்டு, இந்த இடத்தை விற்கப் போவதாக வந்த தகவலை அடுத்து, அப்பகுதியினர் திரண்டு, கட்டடத்தை இடிப்பதற்கு வந்தவர்களைத் திருப்பி அனுப்பினர்.

இதுகுறித்து தகவல் அறிந்து வந்த, தஞ்சை பெரியகோவில் மீட்புக்குழு பொருளாளர், நிருபர்களிடம் கூறியதாவது: "மராட்டிய மன்னர்கள், இந்தத் தூக்கு மேடையை பயன்படுத்தியுள்ளனர். காலப்போக்கில் தூக்கு மேடை பயன்படுத்தாமல் இருந்ததால், தற்போது கட்டுமானம் மட்டும் எஞ்சியுள்ளது. திடீரென சிலர் இதைத் தங்களுக்குரியது எனக்கூறி, இடித்து அகற்ற முயற்சி செய்து வருகின்றனர். தடுத்து நிறுத்தியுள்ளோம். இந்த இடத்தை தொல்லியல் துறையினர் ஆய்வு செய்து, எஞ்சியுள்ள கட்டுமானத்தை பாதுகாக்க வேண்டும்" எனவும் தெரிவித்துள்ளார்.

தெலுங்கானா

## முதலமைச்சரின் காலில் விழுந்ததால் சர்ச்சை



தெலுங்கானாவில், முதலமைச்சரின் காலில் கலெக்டர்கள் விழுந்து வணங்கியது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

சித்திப்பேட்டை மாவட்டத்தில் புதிதாக கட்டப்பட்ட கலெக்டர் அலுவலகத்தை, முதலமைச்சர் சந்திரசேகர ராவ் திறந்து வைத்தார். அப்போது அந்த மாவட்ட கலெக்டர் வெங்கடராம் ரெட்டி, அருகில் இருந்த முதலமைச்சர் சந்திரசேகர ராவின் கால்களைத் தொட்டு வணங்கினார்.

மாநில தலைமைச் செயலாளர் சோமேஷ் குமார் உள்ளிட்ட பல மூத்த அதிகாரிகளுக்கு முன்னிலையில், முதலமைச்சரின் கால்களை ஒரு ஐ.ஏ.எஸ் அதிகாரி தொட்டு வணங்கியது, சர்ச்சைக்குள்ளாகி உள்ளது.

கலெக்டர் வெங்கடராம் வெளியிட்ட அறிக்கையில், 'முதலமைச்சர் எனக்கு தந்தையைப் போன்றவர். விசேஷமான நாள்களில் பெரியவர்களிடம் ஆசி பெறுவது மாநில கலாசாரம். எனவே, புதிய அலுவலகத்தில் பொறுப்பேற்பதற்கு முன், அவரிடம் ஆசி பெற்றேன்' என, விளக்கம் அளித்தார்.

புதுடெல்லி

"தடுப்பூசியைச் செலுத்துங்கள்"

## ராகுலுக்கு வேண்டுகோள்




காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, இன்னும் தடுப்பூசி போட்டுக் கொள்ளவில்லை என்றால், அவர், உடனடியாகப் போட்டுக்கொள்ள வேண்டும் என மத்திய அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடு முழுவதும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

தடுப்பூசி நிறுவனங்கள், மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கங்கள், தனியார் மருத்துவமனைகளுக்கு மாறுபட்ட விலையில் வழங்குவதாக அறிவித்தன. இதற்கு பல்வேறு தரப்பில் இருந்தும் எதிர்ப்பு கிளம்பியது. தடுப்பூசிகளுக்கு ஒரே மாதிரியான விலை நிர்ணயிக்க வேண்டும், மக்கள் அனைவருக்கும் மத்திய அரசாங்கம் இலவசமாக தடுப்பூசி செலுத்திட வேண்டும் என கோரிக்கை விடுத்தது.

இந்நிலையில் மத்திய அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் கூறியதாவது: "காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல், கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்டாரா என்பதை நாட்டு மக்களுக்கு அறிவிக்கவில்லை. நீங்கள் இன்னும் தடுப்பூசி போட்டுக் கொள்ளவில்லை எனில், உடனடியாக போட்டுக் கொள்ளவும். இதனை உங்களுக்கு வேண்டுகோளாக முன்வைக்கிறேன்" என்று தெரிவித்திருந்தார்.

புதுடெல்லி

தடுப்பூசிகள் கைவசம்

## டிசெம்பருக்குள் 257 கோடி



உலகில் மிக வேகமாகப் பரவிக் கொண்டிருந்த கொரோனா, தற்போது இந்தியாவில் குறையத் தொடங்கியுள்ளது. இதற்காக, மிக வேகமாக தடுப்பூசி திட்டம் இந்தியாவில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் 9 மாதத்துக்குள் 2 தடுப்பூசி டோஸ்களையும் பயன்பாட்டுக்கு கொண்டு வந்தோம். எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் இந்தியாவின் கைவசம் 257 கோடி டோஸ் தடுப்பூசிகள் இருக்கும்

பாரதிய ஜனதா தேசிய தலைவர் ஜே.பி.நட்டா டெல்லியில் உள்ள ராம் மனோகர் லோகியா ஆஸ்பத்திரியின் தடுப்பூசி மையத்துக்கு சென்றுள்ளார்.


பின்னர், அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது: பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் 9 மாதத்துக்குள் 2 தடுப்பூசிகளை பயன்பாட்டுக்கு கொண்டு வந்தோம். மோடியின் அழைப்பை ஏற்று 130 கோடி மக்கள் தடுப்பூசி போட்டுக்கொள்ள முன்வந்துள்ளனர்.

அவர்களுக்கு முழு வேகத்தில் 2 டோஸ் தடுப்பூசி போடுவதற்காக, எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்குள் இந்தியாவின் கைவசம் 257 கோடி டோஸ் தடுப்பூசிகள் இருக்கும் என்று தெரிவித்தார்.

திருவண்ணாமலை

பலாத்காரம் செய்த தந்தை

## அம்மிக் கல்லால் அடித்துக்கொலை




பாலியல் பலாத்காரம் செய்ய முயன்ற தந்தையை, அம்மிக் கல்லால் தலையில் அடித்துக் கொலை செய்த மகளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் அருகே உள்ள கிராமத்தை சேர்ந்த, 40 வயதுள்ள தெருக்கூத்து கலைஞருக்கு, 16, 19 வயதுகளில் இரண்டு மகள்கள் உள்ளனர். இதன்போது, நேற்று (22) காலை, அவரது மனைவியும் இளைய மகளும் திருவண்ணாமலைக்கு சென்றிருந்தனர். மூத்த மகள் மட்டும் வீட்டில் தனியாக இருந்துள்ளார். மதியநேரம், குடிபோதையில் வந்த தகப்பன், மூத்த மகளை பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சி செய்துள்ளார். மகளோ தனது தகப்பன் குடிபோதையில் இவ்வாறு செய்வதைத் தாங்கிக் கொள்ளமுடியாமல் அதிர்ச்சியடைந்தார். தன்னைக் காப்பாற்றிக் கொள்ள, அம்மிக்கல்லால் தலையில் அடித்ததில், சம்பவ இடத்திலேயே தகப்பன் பலியானார்.

இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடர் இன்று ஆரம்பிக்கிறது:

# இங்கிலாந்தை வீழ்த்துமா இலங்கை?

இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரானது, கார்டிஃப்பில் இலங்கை நேரப்படி இன்றிரவு 11 மணிக்கு ஆரம்பமாகவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளுக்கான அணிகளின் தரவரிசையில் முதலாமிடத்தில் இங்கிலாந்தும், எட்டாமிடத்தில் இலங்கையும் காணப்படுகின்றன.

இந்நிலையில், இத்தொடரை இலங்கை வென்றால் ஏழாமிடத்துக்கு முன்னேறும் என்பதோடு, இங்கிலாந்து இரண்டாமிடத்துக்கு கீழிறங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அணித்தலைவர் ஒய்ன் மோர்கனின் கீழ் ஜொஸ் பட்லர், ஜொனி பெயார்ஸ்டோ, டேவிட் மலன், ஜேஸன் றோய், சாம் கர்ரன், அடில் ரஷீட், மொயின் அலி, கிறிஸ் வோக்ஸ், மார்க் வூட் என மிகவும் பலமானதாக இங்கிலாந்து காணப்படுகின்றது.



அந்தவகையில், இத்தொடரில் எவ்விதமான வாய்ப்பையும் கொண்டிருப்பதற்கு அணித்தலைவர் குஷல் பெரேரா, தனுஷ்க குணதிலக உள்ளிட்டோர் பெரிய இனிங்ஸ்களை ஒவ்வொரு போட்டியிலும் நிலைத்து நின்று ஆட வேண்டியுள்ளது.

யூரோ கிண்ணத் தொடர்

# விலகல் சுற்றில் டென்மார்க், ஒஸ்திரியா

யூரோ கிண்ணத் தொடரின் விலகல் முறையிலான சுற்றுப் போட்டிக்கு டென்மார்க், ஒஸ்திரியா, இங்கிலாந்து, செக். குடியரசு, ஜேர்மனி ஆகியன தகுதி பெற்றுள்ளன.



டென்மார்க்கில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணிக்கும், ரஷ்யாவுக்குமிடையிலான போட்டியில் 4-1 என்ற கோல் கணக்கில் வென்று குழுவில் கோலெண்ணிக்கை அடிப்படையில் இரண்டாமிடம் பெற்றதையடுத்தே விலகல் முறையிலான சுற்றுக்கு டென்மார்க் தகுதிப் பெற்றுள்ளது.

டென்மார்க் சார்பாக, மிக்கேல் டம்ஸ்கார்ட், யூசுஃப் பௌலஸ்சென், அன்ட்றியாஸ் கிறிஸ்டியென்சன், ஜோகிம் மஹெல்லே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். ரஷ்யா சார்பாகப் பெறப்பட்ட கோலை அர்டெம் டிஸூபா பெற்றிருந்தார்.

இதேவேளை, றோமானியாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற உக்ரேனுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் வென்று குழுவில் இரண்டாமிடத்தைப் பெற்றதைத் தொடர்ந்தே விலகல் முறையிலான சுற்றுக்கு ஒஸ்திரியா தகுதி பெற்றுள்ளது. ஒஸ்திரியா சார்பாகப் பெறப்பட்ட கோலை கிறிஸ்டோஃப் பௌம்கார்ட்னர் பெற்றிருந்தார்.

இதேவேளை, நேற்று முன்தின போட்டிகளைத் தொடர்ந்து அந்தந்த குழுக்களில் குறைந்தது மூன்றாமிடங்களையாவது உறுதிப்படுத்திக் கொண்ட இங்கிலாந்து, செக். குடியரசு, ஜேர்மனி ஆகியனவும் விலகல் முறையிலான சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

பி.எஸ்.எல்:

# இறுதிப் போட்டியில் முல்தான் சுல்தான்ஸ்



பாகிஸ்தானின் உள்ளூர் இருபதுக்கு - 20 போட்டித் தொடரான பாகிஸ்தான் சுப்பர் லீக்கின் (பி.எஸ்.எல்) இறுதிப் போட்டிக்கு முல்தான் சுல்தான்ஸ் தகுதி பெற்றுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத் தலைநகர் அபு தாபியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இஸ்லாமபாத் யுனைட்டெட்டுடனான தகுதிப் போட்டியில் வென்றே இறுதிப் போட்டிக்கு சுல்தான்ஸ் தகுதி பெற்றுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: முல்தான்

முல்தான்: 180/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷொஹைப் மக்ஸ்கூட் 59 (41), குஷ்டில் ஷா ஆ.இ 42 (22), ஜோன்ஸன் சார்ள்ஸ் 41 (21) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷடாப் கான் 2/25 [4], ஹஸன் அலி 0/25 [4])

இஸ்லாமபாத்: 149/10 (19 ஓவ. ) (துடுப்பாட்டம்: உஸ்மான் கவாஜா 70 (40) ஓட்டங்கள். பந்துவீச்சு: சொஹைல் தன்வீர் 3/17 [4], பிளஸிங் முஸர்பனி 3/31 [4], இம்ரான் தாஹீர் 2/29 [4])

போட்டியின் நாயகன்: சொஹைல் தன்வீர்

இதேவேளை, பெஷாவர் ஸல்மியுடனான முதலாவது வெளியேற்றப் போட்டியில் தோற்ற நடப்புச் சம்பியன்களான கராச்சி கிங்ஸ் தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பெஷாவர்

கராச்சி: 175/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: பாபர் அஸாம் 53 (45), திஸர பெரேரா 37 (18) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் இர்ஃபான் 2/21 [4], வஹாப் றியாஸ் 2/29 [4])

பெஷாவர்: 176/5 (19.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஹஸரத்துல்லா ஸஸாய் 77 (38), ஷொய்ப் மலிக் 30 (25) ஓட்டங்கள். பந்துவீச்சு: திஸர பெரேரா 2/10 [2])

போட்டியின் நாயகன்: ஹஸரத்துல்லா ஸஸாய்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான

# தொடரை 2-0 என வென்ற தென்னாபிரிக்கா

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-0 என தென்னாபிரிக்கா வென்றுள்ளது.




இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் முதலாவது போட்டியை தென்னாபிரிக்கா ஏற்கெனவே வென்றிருந்த நிலையில், சென். லூசியாவில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து நேற்று முன்தினம் முடிவடைந்த இரண்டாவது டெஸ்டிலும் வென்றமையைத் தொடர்ந்தே 2-0 என தொடரை தென்னாபிரிக்கா வென்றிருந்தது.

நேற்று முன்தின நான்காம் நாளை, தமது இரண்டாவது இனிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 15 ஓட்டங்களுடன் ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள், விரைவாகவே அணித்தலைவர் கிறேய்க் பிறத்வெய்ட், ஷே ஹோப் ஆகியோரை ககிஸோ றபாடாவிடம் இழந்தது.

பின்னர் கைல் மேயர்ஸ் 34 ஓட்டங்களுடன் றபாடாவிடம் ஆட்டமிழந்ததுடன், சிறிது நேரத்தில் ஹட்-ட்ரிக் விக்கெட்டுகளாக கிரண் பவல் 51, ஜேஸன் ஹோல்டர் மற்றும் ஜோஷுவா டா சில்வா ஆகியோர் கேஷவ் மஹராஜ்ஜிடம் வீழ்ந்தனர்.

இதையடுத்து ஜெர்மைன் பிளக்வூட்டும், கேமார் றோச்சும் இனிங்ஸை நகர்த்திச் சென்ற நிலையில், 25 ஓட்டங்களுடன் லுங்கி என்கிடியிடம் பிளக்வூட் வீழ்ந்தார். பின்னர், றோச் 27, ஜேடன் சியல்ஸ் ஏழு ஓட்டங்களுடன் மஹராஜ்ஜிடம் விழ, சகல விக்கெட்டுகளையும் இழந்து 165 ஓட்டங்களையே தமது இரண்டாவது இனிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகள் பெற்று 158 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக றபாடாவும், தொடரின் நாயகனாக குயின்டன் டி கொக்கும் தெரிவாகினர்.

சுவிற்ஸர்லாந்து

கொரோனா:

# ‘வறிய நாடுகளில் தடுப்பூசிகள் முடிவடைகின்றன’

பூகோளப் பகிர்வு திட்டம் ஒன்றின் மூலம் கொரோனாத் தடுப்பூசிகளைப் பெறுகின்ற பாரிய எண்ணிகையான நாடுகளிடம் திட்டங்களைத் தொடர்வதற்கான போதுமான தடுப்பூசிகள் இல்லை என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

131 நாடுகளுக்கு கொவாக்ஸ் திட்டமானது 90 மில்லியன் தடுப்பூசிகளை விநியோகித்துள்ளதாக சுகாதார ஸ்தாபனத்தின் ஆலோசகர் புரூஸ் அய்ல்வோர்ட் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், உலகளாவிய ரீதியில் இன்னும் பரவும் கொரோனாவிலிருந்து சனத்தொகையை பாதுகாப்பதற்கு எதுவித அருகிலும் வரவில்லை என அய்ல்வோர்ட் கூறியுள்ளார்.

ஆபிரிக்காவில் சில நாடுகள் மூன்றாவது அலை தொற்றுக்களை எதிர்கொண்ட நிலையிலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

செல்வந்த நாடுகள் தடுப்பூசிகளைப் பதுக்குவதை நிறுத்துமாறு தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் றமபோஷா நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.




ஆபிரிக்காவில் சனத்தொகையின் இரண்டு சதவீதமாக 40 மில்லியன் தடுப்பூசிகளே செலுத்தப்பட்டுள்ளதாக றமபோஷா கூறியுள்ளார்.

உகண்டா, சிம்பாப்வே, பங்களாதேஷ், ட்ரினிடாட் அன்ட் டொபாகோவில் எதிர்வரும் நாள்களில் தடுப்பூசிகள் முடிவடையும் சில நாடுகள் ஆகும்.

## காட்டுத்தீ



மேற்கு ஐக்கிய அமெரிக்காவில், வெப்பமான, வறண்ட நிலைமைகளில் பல காட்டுத் தீ எரிந்து வருகின்றன. இதில் ஒன்று, வட அரிஸோனாவின் பெரிய நகரத்தை நோக்கி நகர்ந்து வருகின்றது.


ஐ. அமெரிக்கா

## ‘படைவீரர்களாக 8,500 சிறுவர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனர்’

உலகெங்கிலும் வெவ்வேறு மோதல்களில் கடந்தாண்டு 8,500க்கும் அதிகமான சிறுவர்கள், படைவீரர்களாக பயன்படுத்தப்பட்டுள்ளனர் எனவும், ஏறத்தாழ 2,700 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் ஐக்கிய நாடுகள் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபைக்கான ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்தின் சிறுவர் மற்றும் ஆயுத முரண்பாடு தொடர்பான வருடாந்த அறிக்கையிலேயே குறித்த விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

21 மோதல்களில் 19,379 சிறுவர்களுக்கு எதிராக சிறுவர் உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக குறித்த அறிக்கை குறிப்பிடுகிறது. கடந்தாண்டில் பல மீறல்கள் சோமாலியா, கொங்கோ ஜனநாயகக் குடியரசு, ஆப்கானிஸ்தான், சிரியா, யேமனிலேயே புரியப்பட்டுள்ளன.



மியன்மார்

இராணுவப் புரட்சிக்கு எதிரான

## ஆயுதக் குழுவுடன் மண்டலேயில் இராணுவம் மோதல்

மியன்மாரின் இரண்டாவது மிகப் பெரிய நகரமான மண்டலேயில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆயுதக் குழு ஒன்றுடன் கவச வாகனங்களால் ஆதரிக்கப்பட்ட மியன்மார் பாதுகாப்பு படைகள் நேற்று மோதியிருந்தன.

இந்நிலையில், தமது தளம் ஒன்று மீது இராணுவம் தாக்குதல் நடத்தியதுக்கு தமது அங்கத்தவர்கள் பதிலளிப்பதாக மண்டலேயின் புதிய மக்களின் பாதுக்காப்பு படை தெரிவித்துள்ளது.




ஸ்பெய்ன்

## ஸ்பெய்னில் டுபாய் இளவரசி லத்தீ:.பா?

ஐக்கிய அரபு அமீரகத்தின் ஆட்சியாளரின் மகளான இளவரசி லத்தீஃபாவைக் காண்பிக்கும் புகைப்படம் ஒன்று வெளியாகியுள்ளது. அண்மைய மாதங்களில் அரிதாகவே லத்தீஃபா காணப்படுகின்றார் அல்லது கேட்கப்படுகின்றார்.

ஸ்பெய்னின் தலைநகர் மட்ரிட்டிலுள்ள விமான நிலையத்தில் நண்பி ஒருவருடன் லத்தீஃபாவைக் காண்பிக்கும் புகைப்படமே இன்ஸ்டாகிராமில் வெளியாகியுள்ளது.

இவ்வாண்டு பெப்ரவரி மாதத்தில் லத்தீஃபா மாளிகை ஒன்றில் அடைக்கப்பட்டிருக்கும் மற்றும் உயிருக்கு அஞ்சியவாறு இருக்கும் காணொளி



ஒன்றை பிரித்தானிய ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் (பி.பி.சி) ஒளிபரப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


சுவீடன்

## நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியடைந்த பிரதமர்

நம்பிக்கையில்லா வாக்கெடுப்பு ஒன்றில் சுவீடன் பிரதமர் ஸ்டியஃபான் லூஃபியன் தோல்வியடைந்துள்ளார்.

அந்தவகையில், பதவியிலிருந்து இராஜினாமா செய்து, புதிய அரசாங்கம் ஒன்றை கண்டுபிடிக்கும் அல்லது இடைத் தேர்தல் ஒன்றைக் கோரும் பணியை சபாநாயகரிடம் அளிப்பதற்கு பிரதமர் லூஃபியனுக்கு ஒரு வாரம் காணப்படுகிறது.

மத்திய இடதுசாரி அரசாங்கத்துக்கான ஆதரவை இடது கட்சி வாபஸ் பெற்றமையை அடுத்தே தேசியவாத சுவீடன் ஜனநாயகக் கட்சி பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நம்பிக்கையில்லா வாக்கெடுப்பை கோர முடிந்திருந்தது.



புதிதாகக் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான வாடகைக் கட்டுப்பாடுகளை தளர்த்துவது தொடர்பிலேயே மத்திய இடதுசாரி அரசாங்கத்துக்கான ஆதரவை இடது கட்சி வாபஸ் பெற்றிருந்தது.

கடந்த 2014ஆம் ஆண்டு முதல் பிரதமராக லூஃபியன் இருந்து வருகின்றார்.

349 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் பிரேரணை நிறைவேறுவதற்கு 175 வாக்குகள் தேவை என்ற நிலையில், 181 பாராளுமன்ற உறுப்பினர்களால் பிரேரணை ஆதரிக்கப்பட்டிருந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 23 ஜூன் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.